| 1. | முதன்மை உற்பத்தி | மீன்பிடித்தல், சுரங்கத் தொழில் |
| 2. | காலப் பயன்பாடு | எதிர்கால சேமிப்பு |
| 3. | நாடுகளின் செல்வம் | ஆடம் ஸ்மித் |
| 4. | மனித மூலதனம் | கல்வி, உடல்நலம் |
| 5. | புதுமை புனைபவர் | தொழில் முனைவோர் |



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores


## IV. குறுகிய விடையளி.

**1. உற்பத்தி என்றால் என்ன?**

**விடை:** நுகர்வோரின் பயன்பாட்டுக்காக, மூலப்பொருளையும், மூலப்பொருள் அல்லாதனவற்றையும் ஒன்றிணைத்து, ஒரு பொருளை உருவாக்கும் செயலே உற்பத்தியாகும்.

**2. பயன்பாடு என்பது என்ன?**

**விடை:** பயன்பாடு என்பது நமது தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்வதாகும்.

**3. பயன்பாட்டின் வகைகளை எழுதுக.**

**விடை:** பயன்பாட்டின் வகைகள் மூன்று வகைப்படும். அவை

1. வடிவப் பயன்பாடு
2. இடப் பயன்பாடு
3. காலப் பயன்பாடு

**4. உற்பத்திக் காரணிகளைக் கூறுக.**

**விடை:** உற்பத்திக் காரணிகள் இரண்டு முக்கிய பிரிவுகளாக உள்ளன.

1. முதன்மை உற்பத்திக் காரணிகள்
2. பெறப்பட்ட உற்பத்திக் காரணிகள் அல்லது இரண்டாம் நிலை உற்பத்திக் காரணிகள் அல்லது நவீன உற்பத்திக் காரணிகள்,
3. நிலம் மற்றும் உழைப்பு ஆகியவை முதன்மை உற்பத்திக் காரணிகள் என்றும், மூலதனம் மற்றும் தொழிலமைப்பு ஆகியவை பெறப்பட்ட அல்லது இரண்டாம் நிலை உற்பத்திக் காரணிகள் என்றும் அழைக்கப்படுகின்றன.

**5. உழைப்பு வரையறு.**

**விடை:** ஆல்பிரட் மார்ஷல் என்பவரது கூற்றுப்படி, உழைப்பு என்பது, "ஒரு பணியை ஒருவர் செய்வதால், அவருக்குக் கிடைக்கும் மனநிறை மட்டுமின்றி அதனை செய்வதற்காக கைமாறு எதிர்பார்த்து மனிதன் தன் உடல் அல்லது அறிவை முழுமையாகவோ பகுதியாகவோ பயன்படுத்தி மேற்கொள்ளும் கடும் முயற்சியே உழைப்பாகும்."

**6. வேலை பகுப்பு முறை -வரையறு.**

**விடை:** ஒரு உற்பத்தியை நன்கு வரையறுக்கப்பட்ட வெவ்வேறு உட்பிரிவுகளாகப் பிரித்து அந்த உட்பிரிவுகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தனிப்பட்ட உழைப்பாளி அல்லது உழைப்பாளர் குழுவினரிடம் ஒப்படைத்தலே வேலைப்பகுப்பு முறை எனப்படும்.

**7. மூலதனத்தின் வடிவங்கள் யாவை?**

**விடை:**
1. பருமப்பொருள் மூலதனம் (அல்லது) பொருட்சார் மூலதனம். **எ.கா.** இயந்திரங்கள், கருவிகள், கட்டிடங்கள் போன்றவை.
2. பணமூலதனம் அல்லது பணவியல் வளங்கள். **எ.கா.** வங்கி வைப்புகள், பங்குகள் மற்றும் பத்திரங்கள் போன்றவை.
3. மனித மூலதனம் அல்லது மனிதத்திறன் வளங்கள். **எ.கா.** கல்வி, பயிற்சி மற்றும் சுகாதாரம் ஆகியவற்றில் முதலீடுகள்.

**8. தொழில் முனைவோரின் பண்புகள் மூன்றினைக் கூறுக.**

**விடை:**
1. இலாபகரமான முதலீட்டு வாய்ப்புகளை அடையாளம் காணுதல்.
2. உற்பத்தி அலகின் இருப்பிடத்தைத் தீர்மானித்தல்.
3. புதுமைகளை உருவாக்குதல்.

## V. விரிவான விடையளி.

**1. உற்பத்தியின் வகைகளை விரிவாக எழுதுக.**

**விடை: I. முதன்மை நிலை உற்பத்தி :**

1. இயற்கையாகக் கிடைக்கும் பொருள்களை, நேரடியாகப் பயன்படுத்திச் செய்கின்ற செயல்பாடுகளுக்குட்பட்ட நிலையை முதன்மை நிலை உற்பத்தி என்கிறோம்.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores


2. முதன்மை நிலையில் வேளாண்மைக்கு முதலிடம் அளிக்கப்படுவதால், இதனை வேளாண்மைத்துறை உற்பத்தி எனவும் கூறுவர்.
3. வேளாண்மை, காடுவளர்ப்பு, மீன் பிடித்தல், சுரங்கத்தொழில் மற்றும் எண்ணெய் வளங்களைப் பிரித்தெடுத்தல் போன்றவை முதன்மைநிலை உற்பத்திக்கு உதாரணங்களாகும்.

**II. இரண்டாம் நிலை உற்பத்தி :**

1. முதன்மை நிலையிலிருந்து கிடைக்கின்ற பொருள்களை மூலப்பொருள்களாகப் பயன்படுத்திப் புதிய உற்பத்திப் பொருள்களாக உருவாக்கும் செயல்பாட்டை இரண்டாம் நிலை உற்பத்தி என்கிறோம்.
2. இரண்டாம் நிலையில் தொழிற்சாலைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதால் இதனைத் தொழில்துறை உற்பத்தி எனவும் கூறுவர்.
3. நான்கு சக்கர வாகனங்கள், ஆயத்த ஆடைகள், இரசாயனப் பொருள்கள், பொறியியல் மற்றும் கட்டுமானப் பணிகள் போன்றவைகள் இரண்டாம் நிலை உற்பத்திக்கு உதாரணங்களாகும்.

**III. மூன்றாம் நிலை உற்பத்தி :**

1. சமூகத்தில் ஆசிரியர்கள் மருத்துவர்கள் போன்றோர் ஆற்றும் சேவைகள் மூன்றாம் நிலை உற்பத்தி எனலாம். இவைகள் கண்களுக்கு புலப்படாதவை.
2. வங்கி, காப்பீடு, கல்வி மற்றும் பாதுகாப்பு ஆகியவைகள் சேவைத் துறைகளுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

**2. நிலம் என்றால் என்ன? அதன் சிறப்பியல்புகளை விவரிக்க.**

**விடை:** 'நிலம்' என்னும் உற்பத்திக் காரணி, இயற்கை வளங்கள் அனைத்தையும் அல்லது இயற்கை மனிதனுக்கு இலவசமாகக் கொடுத்திருக்கும் கொடை அனைத்தையும் குறிப்பதாகும்.

**நிலத்தின் சிறப்பியல்புகள் :**

1. **நிலம் இயற்கையின் கொடை:** நிலமானது மனித உழைப்பினால் உருவானதன்று. மாறாக அது மனிதனின் பரிணாம வளர்ச்சி தொடங்குவதற்கு முன்பே தோன்றியதாகும்.
2. **நிலத்தின் அளிப்பு நிலையானது :** நிலத்தின் மொத்த பரப்பளவையும் எந்த மாற்றத்திற்கும் உட்படுத்த இயலாது. மனிதன் மேற்கொள்ளும் முயற்சியால் நிலத்தின் அளவை அதிகரிக்கவோ, குறைக்கவோ முடியாது. நிலத்தின் செழிப்பை உயர்த்த முடியுமே தவிர, அதன் அளவை மாற்றமுடியாது.
3. **நிலம் அழிவில்லாதது :** மனிதனால் உருவாக்கப்பட்ட அனைத்துப் பண்டங்களும் அழிந்துபோகக் கூடியவை. ஆனால் நிலம் அழிவில்லாதது. நிலத்தின் அளிப்பு என்றும் மாறாததாக அழிவற்றதாக உள்ளது.
4. **நிலம் ஒரு முதன்மை உற்பத்திக் காரணி :** நாம் செய்கின்ற எந்த ஓர் உற்பத்திப் பொருளுக்கும் நிலமே அடிப்படையாக அமைகிறது. எடுத்துக்காட்டாக, தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருள்களை அளிக்க உதவுகிறது. வேளாண்மை மூலம், பயிர்களை விளைவிக்க உதவுகிறது.
5. **நிலம் இடம் பெயரக் கூடியதன்று:** நிலத்தை ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்ல முடியாது. உதாரணமாக, இந்திய நிலப்பரப்பின் எந்த ஒரு பகுதியையும் வேறு நாட்டிற்கு இடம் பெயரச் செய்ய இயலாது.

**3. வேலை பகுப்பு முறையின் நன்மைகள் மற்றும் தீமைகளை எழுதுக.**

**விடை: வேலைப்பகுப்பு முறையின் நன்மைகள்:**

1. உழைப்பாளி ஒருவர், ஒரே வேலையை மீண்டும் மீண்டும் செய்வதனால் அந்த வேலையில் திறமையுடையவராக ஆகிறார்.
2. இம்முறை நவீன இயந்திரங்களை உற்பத்தியில் அதிகமாக ஈடுபடுத்துவதற்கு வழி வகுக்கிறது. **எ.கா.** கம்பியில்லாத் தந்தியின் கண்டுபிடிப்பு.
3. காலமும், மூலப்பொருட்களும் மிகத் திறமையாகப் பயன்படுத்தப்படுகின்றன.


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores


**வேலைப்பகுப்பு முறையின் தீமைகள் :**

1. தொழிலாளி, ஒரே வேலையைத் திரும்ப, திரும்ப செய்வதால், சுவையற்ற, களிப்பற்ற, தன்மையை அடைகிறார். இது மனிதத் தன்மையை அழிக்கிறது.
2. ஒரு பகுதி பணியினை மட்டும் ஒரு தொழிலாளி மேற்கொள்ளுவதால், அவர் குறுகிய தேர்ச்சியை மட்டுமே பெறுகிறார். இதனால் வேலை வாய்ப்பின்மை பெருகும் நிலை உருவாகிறது.
3. இம்முறை கைவினைப் பொருள்களின் வளர்ச்சியினைப் பாதிக்கின்றது. ஒரு தொழிலாளி, ஒரு பொருளினை முழுவதுமாக உருவாக்கிய மன நிறைவினைப் பெறுவதில்லை.

**4. மூலதனத்தின் சிறப்பியல்புகளை விளக்குக.**

1. மூலதனம் செயலற்ற ஓர் உற்பத்திக் காரணி.
2. மனித முயற்சியால் உருவாக்கப்படுகிறது.
3. மூலதனம் அதிகம் இயங்கும் தன்மையுடையது.
4. இதன் அளிப்பு நெகிழுந்தன்மையுடையது.
5. மூலதனம் ஆக்கமுடையது.
6. மூலதனம் பல ஆண்டுகள் நீடிக்கும்.
7. மூலதனத்தை ஈடுபடுத்துவதன் நோக்கம், எதிர்காலத்தில் வருமானம் பெற வேண்டும் என்பதேயாகும்.

---

## கூடுதல் வினாக்கள்

**I சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. ஒரு விளைபொருள், ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செல்லப்படும்போது ________ பயன்பாடு எனப்படும்.**

அ) இட ஆ) வடிவ இ) கால ஈ) இவற்றில் எதுவுமில்லை

**[விடை: அ) இட]**

**2. ________ பயன்பாடு என்பது ஒரு விளைபொருளை எதிர்காலத் தேவைக்காகச் சேமித்து வைப்பதாகும்.**

அ) இட ஆ) வடிவ இ) கால ஈ) இவற்றில் எதுவுமில்லை

**[விடை: இ) கால]**

**3. முதன்மைத் துறைக்கு எடுத்துக்காட்டு ________ .**

அ) ஆடை உற்பத்தி ஆ) பொருள் தயாரிப்பு
இ) பருத்தித் தொழில் ஈ) உணவு உற்பத்தி **[விடை: இ) பருத்தித் தொழில்]**

**4. நமது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பெரும்பங்கு வகிப்பவை ________ உற்பத்திகளே.**

அ) முதல்நிலை ஆ) இரண்டாம் நிலை
இ) மூன்றாம் நிலை ஈ) நான்கானம் நிலை **[விடை: இ) மூன்றாம் நிலை]**

**5. உற்பத்திக் காரணிகளை ________ ஆக பிரிக்கலாம்.**

அ) மூன்று ஆ) இரண்டு இ) நான்கு ஈ) ஆறு **[விடை: ஆ) இரண்டு]**

**6. ________ பொருளியலின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.**

அ) ஆடம்ஸ்மித் ஆ) மன்மோகன் சிங்
இ) ஆல்பிரட் மார்ஷல் ஈ) சர் கான் மார்ஷல் **[விடை: அ) ஆடம்ஸ்மித்]**

**7. கல்வி, பயிற்சி மற்றும் சுகாதாரம் ஆகியவற்றில் முதலீடுகள் ________ மூலதனம் எனப்படும்.**

அ) மனித ஆ) பண இ) பருமப்பொருள் ஈ) இவற்றில் அனைத்தும்

**[விடை: அ) மனித]**

**8. இயற்கையின் கொடை தவிர்த்த வருமானம் அளிக்கக்கூடிய பிற வகைச் செல்வங்களே ______ ஆகும்.**

அ) மூலதனம் ஆ) உழைப்பு இ) முயற்சி ஈ) உடல்நலம்

**[விடை: அ) மூலதனம்]**

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. ________ எனப்படுபவர் பல உற்பத்திக் காரணிகளை ஒருங்கிணைத்துச் செயல்படுபவர் ஆவார். **[விடை: தொழில் முனைவோர்]**
2. ________ செயலற்ற ஓர் உற்பத்திக் காரணி. **[விடை: மூலதனம்]**
3. இந்தியாவில் ________ பொருளாதார நிலை காணப்படுகிறது. **[விடை: கலப்பு]**
4. பொருளாதாரத்தில் ________, ________ இரு இன்றியமையாத செயல்கள். **[விடை: உற்பத்தியும், நுகர்வும்]**
5. உற்பத்தி செய்வதற்குப் பொறுப்பு ஏற்கும் ஓர் காரணியே ________ அல்லது ________. **[விடை: அமைப்பு, நிறுவனம்]**

## III. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. பருமப்பொருள் மூலதனம் | - | i. | முதன்மைத் துறை |
| 2. கலப்பு பொருளாதார நிலை | - | ii. | சேவைத்துறை |
| 3. இரும்புத் தாது | - | iii. | சமுதாய மாற்றம் காணும் முகவர் |
| 4. வங்கி, வணிகம், கல்வி | - | iv. | இந்தியா |
| 5. தொழில் முனைவோர் | - | v. | இயந்திரங்கள் |

**[விடை: 1-v, 2-iv, 3-i, 4-ii, 5-iii]**

## IV. குறுகிய விடையளி.

**1. பொருளியலின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?**

விடை: பொருளியலின் தந்தை என அழைக்கப்படுபவர் – ஆடம்ஸ்மித்.

**2. நமது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பெரும்பங்கு வகிப்பவை எவை?**

விடை: மூன்றாம் நிலை அல்லது சேவைத்துறை உற்பத்திகள்.

**3. மனிதனின் செயல்பாடுகள் எவை?**

விடை: உற்பத்தி செய்தல், நுகர்தல் என்னும் இரு கூறுகளில் உள்ளடங்கியுள்ளன.

**4. ஆடம்ஸ்மித்தின் இரு நூல்கள் எவை?**

விடை: "நன்னெறி கருத்து உணர்வுக் கொள்கை", "நாடுகளின் செல்வமும், அவற்றை உருவாக்குகின்ற காரணிகளும் ஓர் ஆய்வு" என்பன, அவரின் சிறந்த இரு படைப்பு நூல்கள் ஆகும்.

**5. உற்பத்தியின் வகைகளைக் குறிப்பிடுக.**

விடை: உற்பத்தியின் வகைகள் மூன்று வகைப்படும். அவை

1. முதன்மை நிலை உற்பத்தி
2. இரண்டாம் நிலை உற்பத்தி
3. மூன்றாம் நிலை உற்பத்தி

**6. சமுதாய மாற்றம் காணும் முகவர் யார்?**

விடை: தொழில் முனைவோர் 'சமுதாய மாற்றம் காணும் முகவர்' ஆவார்.

## V. விரிவான விடையளி.

**1. உழைப்பின் சிறப்பியல்புகள் யாவை?**

விடை: 1. மற்ற உற்பத்திக் காரணிகளைக் காட்டிலும் உழைப்பு அதிகமாக அழியக் கூடியதாக உள்ளது. அதாவது உழைப்பைச் சேமித்து வைக்க இயலாது. வேலையில்லாத தொழிலாளியின் உழைப்பானது அவர் வேலை செய்யாத நாளில் இழக்கப்படுகிறது. உழைப்பைத் திரட்டவோ அடுத்தநாள் தள்ளிப்போடவோ இயலாது. அதனை ஒரு முறை இழந்தால் மீண்டும் திரும்பப் பெற இயலாது.

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores


2. உற்பத்தியில் உழைப்பு என்பது ஓர் செயற்படு காரணியாகும். நிலமோ, மூலதனமோ, உழைப்பு இல்லாமல் அதிக உற்பத்தியை அளிக்க இயலாது.
3. உழைப்பு ஒரே சீரானதல்ல. திறமையும், பயிற்சியும் நபருக்கு நபர் மாறுபடுகின்றன.
4. உழைப்பை உழைப்பாளரிடமிருந்து பிரிக்க இயலாது.
5. உழைப்பு இடம்பெயரக் கூடியது. குறைந்த ஊதியம் பெறுவதைக் காட்டிலும் அதிக ஊதியம் பெறவேண்டும் என்பதற்காக மனிதர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு இடம் பெயர்கிறார்கள்.
6. தனியாக உழைக்கும் உழைப்பாளரிடம் பேரம் பேசும் ஆற்றல் குறைவு. தொழிலாளிகள் தங்களுக்குள் ஒருங்கிணைந்து தொழிற்சங்கம் அமைத்து போராடுவதன் மூலம் பேரம் பேசும் ஆற்றல் அதிகரிக்கிறது.

**2. தொழில் முனைவோர் என்பவர் யார்? அவரின் சிறப்பியல்புகள் யாவை?**

விடை:1. தொழில் முனைவோர் எனப்படுபவர் பல உற்பத்திக் காரணிகளை (நிலம், உழைப்பு, மூலதனம்) ஒருங்கிணைத்துச் செயல்படுபவர் ஆவார். அக்காரணிகளைச் சரியான அளவிலும், முறையிலும் தொடங்கி இடர்ப்பாடுகளை ஏற்று, உற்பத்தி அதிகரிக்க முயல்பவரே தொழில் முனைவோர் ஆவார்.

2. தொழில் முனைவோர் 'தொழில் அமைப்பாளர்' எனவும் அழைக்கப்படுகிறார். தற்காலத்தில் தொழில் முனைவோர் சமுதாய மாற்றம் காணும் முகவர் என அழைக்கப்படுகிறார். இவர் சமுதாய விருப்பமுள்ள உற்பத்தியைக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல் சமுதாய நலம் மேம்படவும் காரணமாகிறார்.

**தொழில் முனைவோரின் சிறப்பியல்புகள் :**

1. இலாபகரமான முதலீட்டு வாய்ப்புகளை அடையாளம் காணுதல்.
2. உற்பத்தி அலகின் இருப்பிடத்தைத் தீர்மானித்தல்.
3. புத்தாக்கத்தினை உருவாக்குதல்.
4. வெகுமதி செலவைத் தீர்மானித்தல்.
5. இடர்களை ஏற்றல் மற்றும் நிச்சயமற்ற தன்மையை எதிர்கொள்ளல்.

☆ ☆ ☆

# அலகுத் தேர்வு

நேரம் : 45 நிமிடங்கள் மதிப்பெண் : 25

**I சரியான விடையைத் தேர்வு செய்க.** (5 × 1 =5)

**1. உற்பத்தி என்பது**

அ) பயன்பாட்டை அழித்தல் ஆ) பயன்பாட்டை உருவாக்குதல்
இ) மாற்று மதிப்பு ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

**2. பயன்பாட்டின் வகைகளாவன**

அ) வடிவப் பயன்பாடு ஆ) காலப் பயன்பாடு
இ) இடப் பயன்பாடு ஈ) மேற்கண்ட அனைத்தும்

**3. கல்வி, பயிற்சி மற்றும் சுகாதாரம் ஆகியவற்றில் முதலீடுகள் ________ மூலதனம் எனப்படும்.**

அ) மனித ஆ) பண இ) பருமப்பொருள் ஈ) இவற்றில் அனைத்தும்

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores


4. **இயற்கையின் கொடை தவிர்த்த வருமானம் அளிக்கக்கூடிய பிற வகைச் செல்வங்களே _____ ஆகும்.**
அ) மூலதனம் ஆ) உழைப்பு இ) முயற்சி ஈ) உடல்நலம்

5. **தொழில் முனைவோர் என அழைக்கப்படுவர்**
அ) பரிமாற்றம் செய்பவர் ஆ) முகவர்
இ) அமைப்பாளர் ஈ) தொடர்பாளர்

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக. (4 × 1 =4)

1. _________ செயலற்ற ஓர் உற்பத்திக் காரணி.
2. இந்தியாவில் _________ பொருளாதார நிலை காணப்படுகிறது.
3. _______ என்பது பண்டத்திற்கான விருப்பங்களை நிறைவு செய்யும் சக்தியாகும்.
4. பெறப்பட்ட காரணிகள் என்பது _______ மற்றும் ________ ஆகும்.

## III. பொருத்துக. (5 × 1 =5)

| | | | |
|---|---|---|---|
| 1. பருமப்பொருள் மூலதனம் | - | i. | முதன்மைத் துறை |
| 2. கலப்பு பொருளாதார நிலை | - | ii. | சேவைத்துறை |
| 3. இரும்புத் தாது | - | iii. | சமுதாய மாற்றம் காணும் முகவர் |
| 4. வங்கி, வணிகம், கல்வி | - | iv. | இந்தியா |
| 5. தொழில் முனைவோர் | - | v. | இயந்திரங்கள் |

## IV. ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் விடையளிக்கவும். (3 × 2 = 6)

1. மனிதனின் செயல்பாடுகள் எவை?
2. சமுதாய மாற்றம் காணும் முகவர் யார்?
3. வேலை பகுப்பு முறை –வரையறு.

## V. விரிவாக விடையளிக்கவும் : (1 × 5 = 5)

1. நிலம் என்றால் என்ன? அதன் சிறப்பியல்புகளை விவரிக்க.

## விடைகள்

I) 1. ஆ) பயன்பாட்டை உருவாக்குதல் 2. ஈ) மேற்கண்ட அனைத்தும்
3. அ) மனித 4. அ) மூலதனம் 5. இ) அமைப்பாளர்

II) 1. மூலதனம் 2. கலப்பு 3. உற்பத்தி
4. முதலீடு, அமைப்பு

III) 1-v, 2-iv, 3-i, 4-ii, 5-iii

IV) 1. பார்க்க சுராவின் கையேடு கூடுதல் வினா IV - 3
2. பார்க்க சுராவின் கையேடு கூடுதல் வினா IV - 6
3. பார்க்க சுராவின் கையேடு புத்தக வினா IV - 6

V) 1. பார்க்க சுராவின் கையேடு கூடுதல் வினா V -2

☆ ☆ ☆


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores

K

# முதல் பருவ பொதுத் தொகுத்தறித் தேர்வு-2019-20

பதிவு எண்

## ஏழாம் வகுப்பு
## சமூக அறிவியல்

நேரம் : 2.30 மணி | மதிப்பெண்கள் : 60

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** (10 × 1 = 10)

1. ________ களின் காலம் பக்தி இலக்கியங்களின் காலம் என அறியப்படுகிறது.
அ) சோழர் ஆ) பாண்டியர்
இ) ராஜபுத்திரர் ஈ) விஜயநகர அரசர்கள்

2. கீழ்க்காண்பனவற்றுள் சோழர்களின் நிர்வாகத்தில் மிகச்சிறிய அலகு எது?
அ) மண்டலம் ஆ) நாடு
இ) கூற்றம் ஈ) ஊர்

3. நிலநடுக்கத்தின் ஆற்றல் செறிவின் அளவினை ________ மூலம் அளக்கலாம்.
அ) சீஸ்மோகிராஃப் ஆ) ரிக்டர் அளவு கோல்
இ) அம்மீட்டர் ஈ) ரோட்டோ மீட்டர்

4. பனியாற்றுப் படிவுகளால் தோற்றுவிக்கப்படும் நிலத்தோற்றம் ________ ஆகும்.
அ) சர்க் ஆ) அரெட்டுகள்
இ) மொரைன்கள் ஈ) டார்ன் ஏரி

5. இந்தியாவில் உள்ள அனைத்து குடிமக்களுக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்ட வயது ________.
அ) 21 ஆ) 18 இ) 25 ஈ) 31

6. இந்தியாவில் காணப்படும் கட்சி முறை
அ) ஒரு கட்சி முறை ஆ) இரு கட்சி முறை
இ) பல கட்சி முறை ஈ) இவற்றுள் ஏதுவுமில்லை

7. உற்பத்தி என்பது ________
அ) பயன்பாட்டை அழித்தல் ஆ) பயன்பாட்டை உருவாக்குதல்
இ) மாற்று மதிப்பு ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

8. சரியா? தவறா?
ரஸ்ஸியா திறமை மிக்க, மனவலிமை கொண்ட போர்வீரர்.

9. பொருந்தாததை வட்டமிடுக :
இமயமலை, ஆல்ப்ஸ், ராக்கி, கங்கை

10. கூற்று (A) : முகத்துவாரப் பகுதியில் ஆறுகளால் டெல்டாக்கள் உருவாகின்றன.
காரணம் (R) : கடல் பகுதியை ஆறு அடையும் போது ஆற்றின் வேகம் குறையும்.
அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி
ஆ) (A) சரி மற்றும் (R) தவறு
இ) (A) தவறு மற்றும் (R) சரி
ஈ) (A) மற்றும் (R) இரண்டும் தவறு



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores



**II. கோடிட்ட இடங்களை நிரப்புக :** (5 × 1 = 5)

11. கி.பி.1420 இல் விஜயநகருக்கு வருகை புரிந்த இத்தாலிய பயணி ____________ ஆவார்.
12. ________ வேள்விக்குடி செப்பேடுகளின் கொடையாளி ஆவார்.
13. புவிக்கருவிற்கும், கவசத்திற்கும் இடையே அமையும் எல்லைக்கோடு ___________ என்று அழைக்கப்படுகிறது.
14. குடிமை சமத்துவம் _______ க்கு முன்பு அனைவரும் சமம் என்பதைக் குறிக்கிறது.
15. பெறப்பட்ட காரணிகள் என்பது _______ மற்றும் _________ ஆகும்.

**III. பொருத்துக :** (6 × ½ = 3)

16. விருப்பாக்சா – நட்சத்திர வடிவக் குடியிருப்பு
17. சூரியனார் கோயில் – ஆடம் ஸ்மித்
18. மதுரை – மக்களின் ஆட்சி
19. சட்லஜ் கங்கை சமவெளி – ஹம்பி
20. மக்களாட்சி – பாண்டியர்களின் தலைநகர்
21. நாடுகளின் செல்வம் – கொனார்க்

**IV. எவையேனும் 8 வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடையளி :** (8 × 2 = 16)

22. வரலாற்றை அறிந்து கொள்வதற்கான இருவகைச் சான்றுகளைக் கூறுக.
23. ஏதேனும் நான்கு ராஜபுத்திரக் குலங்களின் பெயர்களை எழுதுக.
24. சோழர் காலத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் யாவை?
25. பிரோஷ் ஷா துக்ளக்கின் சாதனைகளைப் பட்டியலிடுக.
26. எரிமலை என்றால் என்ன? உருவத்தின் அடிப்படையில் மூன்று எரிமலைகளின் பெயர்களை எழுதுக.
27. காயல்கள் என்றால் என்ன? ஒரு உதாரணம் தருக.
28. மொழி என்றால் என்ன?
29. குடியிருப்பு வரையறு.
30. சமத்துவம் – விளக்குக.
31. ஒரு அரசியல் கட்சியின் அடிப்படை கூறுகள் எவை?
32. உற்பத்தியின் வகைகளைக் குறிப்பிடுக.
33. தொழில் முனைவோரின் பண்புகள் இரண்டினை எழுதுக.

**V. எவையேனும் 4 வினாக்களுக்கு மட்டும் விரிவான விடையளி :** (4 × 5 = 20)

34. சிந்துவை அராபியர் கைப்பற்றியதன் தாக்கங்கள் யாவை? (ஏதேனும் ஐந்தினைக் குறிப்பிடவும்)
35. 1398ஆம் ஆண்டில் நடைபெற்ற தைமூரின் படையெடுப்பை விவரி.
36. வேறுபடுத்துக.
    அ) சியால் மற்றும் சிமா
    ஆ) நகர்ப்புற குடியிருப்பு, மற்றும் கிராமப்புறக் குடியிருப்பு.
37. காற்றின் செயல்களால் ஏற்படும் நிலத்தோற்றங்களை விளக்குக.
38. இந்திய அரசியலமைப்பு சட்டம் சமத்துவத்திற்கான உரிமையை எவ்வாறு பாதுகாக்கிறது?
39. வேலை பகுப்பு முறையின் நன்மைகள் மற்றும் தீமைகளை எழுதுக.
40. அ) **கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் குறிக்கவும் :** (6 × ½ = 3)
    i) டெல்லி ii) நாளந்தா iii) காமரூபம்
    iv) சோழர் v) கோழிக்கோடு vi) கோவா

    ஆ) **கொடுக்கப்பட்டுள்ள உலக வரைபடத்தில் குறிக்கவும் :** (6 × ½ = 3)
    i) இந்தியா ii) மவுண்ட் பியூஜியாமா iii) மாயன் எரிமலை
    iv) இந்தியப் பெருங்கடல் v) பசிபிக் பெருங்கடல் vi) ஆப்பிரிக்கா

☆ ☆ ☆

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net
This is Only for Sample for Full Book Order
www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores

7ஆம் வகுப்பு

## இரண்டாம் பருவம்

பாடசாலை

# சமூக அறிவியல்

www.surabooks.com

orders@surabooks.com

Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores
www.CBSEtips.in

# சமூக அறிவியல்


| அலகு | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| | **வரலாறு** | |
| 1. | விஜயநகர், பாமினி அரசுகள் | 93 - 102 |
| 2. | முகலாயப் பேரரசு | 103 - 112 |
| 3. | மராத்தியர்கள் மற்றும் பேஷ்வாக்களின் எழுச்சி | 113 - 122 |
| | **புவியியல்** | |
| 1. | வளங்கள் | 123 - 131 |
| 2. | சுற்றுலா | 132 - 140 |
| | **குடிமையியல்** | |
| 1. | மாநில அரசு | 141 - 148 |
| 2. | ஊடகமும் ஜனநாயகமும் | 149 - 154 |
| | இரண்டாம் பருவ பொதுத் தொகுத்தறித் தேர்வு 2019-20 வினாத்தாள் விடைகளுடன் | 155 - 158 |




www.surabooks.com
orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores



# அலகு 1

# விஜயநகர், பாமினி அரசுகள்

## மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. சங்கம வம்சத்தின் மிக சிறந்த ஆட்சியாளர் யார்?**
அ) புக்கர் ஆ) தேவராயா – II
இ) ஹரிஹரர் – II ஈ) கிருஷ்ண தேவராயர் **[விடை: ஆ) தேவராயா – II]**

**2. விஜயநகர கட்டட தூண்களில் பெரும்பாலும் காணப்படும் விலங்கு எது?**
அ) யானை ஆ) குதிரை இ) பசு ஈ) மான் **[விடை: ஆ) குதிரை]**

**3. சங்கம வம்சத்தின் கடைசி அரசர் யார்?**
அ) ராமராயர் ஆ) திருமல தேவராயா
இ) இரண்யம் தேவராயர் ஈ) இரண்டாம் விருபாக்சராயர்
**[விடை: ஈ) இரண்டாம் விருபாக்சராயர்]**

**4. மதுரை சுல்தானிய அரசை முடிவுக்குக் கொண்டு வந்தவர்**
அ) சாளுவ நரசிம்மர் ஆ) இரண்டாம் தேவராயர்
இ) குமார கம்பண்ணா ஈ) திருமலை தேவராயர்
**[விடை: இ) குமார கம்பண்ணா]**

**5. பாமினி அரசில் சிறந்த மொழியறிஞராகவும், கவிஞராகவும்விளங்கியவர்**
அ) அலாவுதீன் ஹசன்விரா ஆ) முகம்மது – I
இ) சுல்தான் பெரோஸ் ஈ) முஜாஹித் **[விடை: இ) சுல்தான் பெரோஸ்]**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. ஆரவீடு வம்சத்தின் தலைநகரம் _______. **[விடை: பெனுகொண்டா]**
2. விஜயநகரப் பேரரசர்களால் வெளியிடப்பட்ட நாணயங்களுக்கு _______ என்று பெயர். **[விடை: வராகன்]**
3. மகமது கவான் வெடிமருந்து தயாரிக்கவும் அதனைப் பயன்படுத்துவது பற்றி விளக்குவதற்காகவும் _______ வேதியியல் அறிஞர்களை வரச் செய்தார். **[விடை: பாரசீக]**
4. விஜயநகர் நிர்வாகத்தில் கிராம விவகாரங்களை _______ கவனித்தார். **[விடை: கௌடா]**

**III. பொருத்துக.**

| அ | ஆ |
|---|---|
| விஜயநகரா | ஒடிசாவின் ஆட்சியாளர் |
| பிரதாபருத்ரா | அஸ்டதிக்கஜம் |
| கிருஷ்ண தேவராயா | பாண்டுரங்க மகாமத்தியம் |
| அப்துர் ரசாக் | வெற்றியின் நகரம் |
| தெனாலிராமகிருஷ்ணா | பாரசீக சிற்ப கலைஞர் |


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com
www.surabooks.com

விடை:

| அ | ஆ |
|---|---|
| விஜயநகரா | வெற்றியின் நகரம் |
| பிரதாபருத்ரா | ஒடிசாவின் ஆட்சியாளர் |
| கிருஷ்ண தேவராயா | அஸ்டதிக்கஜம் |
| அப்துர் ரசாக் | பாரசீக சிற்ப கலைஞர் |
| தெனாலிராமகிருஷ்ணா | பாண்டுரங்க மகாமத்தியம் |

IV. **(1) கூற்றைக் காரணத்தோடு பொருத்துக : பொருத்தமான விடையை (✓) டிக் இட்டுக் காட்டவும்.**

**கூற்று : இந்தியாவில் விஜயநகர அரசின் இராணுவம் அச்சுறுத்தக் கூடியதாக இருந்தது.**
**காரணம் : விஜயநகர இராணுவம் பீரங்கிபடை மற்றும் குதிரைப்படையை கொண்டிருந்தது.**

அ) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல
ஆ) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்
இ) காரணம் மற்றும் கூற்று தவறு
ஈ) காரணம் மற்றும் கூற்று சரி **[விடை: ஆ) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்]**

**2. தவறான இணையைக் கண்டறியும்.**

அ) பட்டு - சீனா
ஆ) வாசனைப் பொருட்கள் - அரேபியா
இ) விலைமதிப்பற்ற கற்கள் - பர்மா
ஈ) மதுரா விஜயம் - கங்கா தேவி **[விடை: ஆ) வாசனைப் பொருட்கள் - அரேபியா]**

**3. பொருந்தாததைக் கண்டுபிடி.**

அ) ஹரிஹரர் - II
ஆ) மகமுது - I
இ) கிருஷ்ண தேவராயர்
ஈ) தேவராயா - I **[விடை: ஆ) மகமுது - I]**

**4. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க. பொருத்தமான விடையை (✓) டிக் இட்டு காட்டவும்:**

I) பச்சைக்கலந்த நீலவண்ணத்தைக் கொண்ட விலையுயர்ந்த கற்களால் ஆன அரியணை பாரசீக அரசர்களின் அரசவையை அலங்கரித்தன என பிர்தௌசி தன்னுடைய ஷா நாமா எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்
II) விஜயநகர, பாமினி அரசர்களுக்கிடையே மோதல்கள் ஏற்படுவதற்குக் கிருஷ்ணா - துங்கபத்ரா நதிகளுக்கு இடைப்பட்ட செழிப்பான பகுதி மற்றும் கிருஷ்ணா - கோதாவரி நதிகளுக்கு இடைப்பட்ட கழிமுகப் பகுதியே காரணமாக அமைந்தன.
III) முதலாம் முகமது முல்தானில் கல்வி பயின்றார்.
IV) முகமது கவான் மூன்றாம் முகமதுவின் கீழ் தனித்தன்மை மிக்க பிரதம அமைச்சராக பணியாற்றினார்.

அ) I மற்றும் II சரி ஆ) I, II மற்றும் III சரி
இ) II, III மற்றும் IV சரி ஈ) III மற்றும் IV சரி **[விடை: ★) I, II மற்றும் IV சரி]**

V. **சரியா? தவறா?**

1. பாமினி அரசைத் தோற்றுவித்தவர்கள் ஹரிஹரர் மற்றும் புக்கர் ஆவார்கள் **[விடை: தவறு]**
2. இருபது ஆண்டுகள் ஆட்சி செய்த கிருஷ்ணதேவராயர் சங்கம வம்சத்தின் மிகச்சிறந்த அரசராவார். **[விடை: தவறு]**
3. அஸ்டதிக்கஜத்தில் அல்லசானி பெத்தண்ணா குறிப்பிட தகுந்தவராவார். **[விடை: சரி]**
4. விஜயநகரப் பேரரசில் அரசுரிமை என்பது பரம்பரையாகவும், பிறப்புரிமையின் அடிப்படையிலும் வழங்கப்பட்டது. **[விடை: சரி]**
5. பாமினி அரசில் 18 முடியரசுகள் இருந்தன. **[விடை: சரி]**

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores



## VI. ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் விடையளிக்கவும்.

**1. விஜயநகர் பேரரசின் நான்கு வம்சங்களின் மிகச் சிறந்த ஆட்சியாளர்களை எழுதுக.**

விடை:

| | | |
|---|---|---|
| சங்கம வம்சம் | – | இரண்டாம் தேவராயர் |
| சாளுவ வம்சம் | – | சாளுவ நரசிம்மர் |
| துளுவ வம்சம் | – | கிருஷ்ணதேவராயர் |
| ஆரவீடு வம்சம் | – | திருமலை தேவராயர். |

**2. தலைக்கோட்டைப் போரைப் பற்றி எழுதுக.**

விடை:
1. விஜயநகருக்கு எதிராகப் போர் புரிவதற்காகத் தக்காண சுல்தான்கள் ஓர் அணியில் திரண்டனர்.
2. எதிரிகளின் கூட்டுப் படைகள் 1565இல் தலைக்கோட்டை என்னுமிடத்தில் விஜயநகரப் படைகளை எதிர்கொண்டன.
3. ராக்சச தங்கடி ( தலைக்கோட்டைப் போர் ) என்று அறியப்பட்ட இப்போரில் விஜயநகரம் தோற்கடிக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டது. இறுதியாக, விஜயநகரப் பேரரசு அழிக்கப்பட்டது.

**3. விஜயநகர அரசின் அரசமைப்பு முறையைப் பற்றி எழுதுக.**

விடை: **விஜயநகர அரசமைப்பு :**
1. பேரரசு பல்வேறு மண்டலங்கள் (மாநிலம்), நாடுகள் (மாவட்டங்கள்), ஸ்தலங்கள் (வட்டங்கள்) கிராமங்கள் என பிரிக்கப்பட்டிருந்தது.
2. ஒவ்வொரு மண்டலமும் மண்டலேஸ்வரா என்ற ஆளுநரின் கீழிருந்தது.
3. கிராமமே நிர்வாகத்தின் மிகச்சிறிய அலகாக இருந்தது.
4. ஒவ்வொரு கிராமத்திலும் கிராமசபை என்ற அமைப்பு இருந்தது.
5. கிராமம் தொடர்பான விடயங்களைக் கௌடா என்றழைக்கப்பட்ட கிராமத்தலைவர் நிர்வகித்தார்.

**4. தக்காண சுல்தானத்தின் ஐந்து சுதந்திர அரசுகள் யாவை?**

விடை: தக்காண சுல்தானியத்தின் ஐந்து சுதந்திர அரசுகள் பிடார், பிஜப்பூர், அகமதுநகர், பெரார், கோல்கொண்டா ஆகியனவாகும்.

**5. அலாவுதீன் ஹசன் ஷா கல்விக்கு ஆற்றிய பங்களிப்பைக் கூறுக.**

விடை:
1. அலாவுதீன் ஹசன்ஷா தமது மகன்கள் கல்வி கற்பதற்காக ஒரு பள்ளியை நிறுவுவதில் சிறப்புக் கவனம் செலுத்தினார்.
2. அவருடைய மகன் முதலாம் முகமது கல்வி கற்பதை ஆதரித்தவர் ஆவார்.
3. பிரபுக்கள் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் போர்வீரர்களுக்கான கலைகளில் பயிற்சி பெறுவதற்காகப் பயிற்சி நிறுவனங்களை ஏற்படுத்தினார்.

## VII. விரிவாக விடையளிக்க :

**1. கிருஷ்ண தேவராயரின் பணிகள் மற்றும் சாதனைகளைக் குறிப்பிடுக.**

விடை:
1. கிருஷ்ணதேவராயர் விஜயநகர அரசை 20 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தார். இவர் பதவி ஏற்றவுடன் துங்கபத்ரா நதிப் பள்ளத்தாக்குப் பகுதியில் சுதந்திரமாகச் செயல்பட்டு வந்த தலைவர்களை அடக்குவதே அவரின் முதற்கட்ட தலையாய பணியாக இருந்தது.
2. குல்பர்காவை கைப்பற்றுவது இவரின் இரண்டாவது இலக்காகும்.
3. மேலும் போர்த்துக்கீசியப் பீரங்கிப்படை வீரர்களின் உதவியோடு கோல்கொண்டா சுல்தானை கிருஷ்ணதேவராயர் எளிதாகத் தோற்கடித்தார்.
4. பிஜப்பூர் சுல்தானிடமிருந்து ரெய்ச்சூரைக் கைப்பற்றினார்.

**சாதனைகள் :**
1. கிருஷ்ணதேவராயர் மழைநீரைச் சேமிப்பதற்காகப் பெரிய நீர்ப்பாசனக் குளங்களையும், நீர்தேக்கங்களையும் உருவாக்கினார்.
2. இவர் தனது தலைநகரான ஹம்பியில் கிருஷ்ணசாமி கோவில், ஹசாரா ராமசாமி கோவில், வித்தலசாமி கோவில் போன்ற புகழ்பெற்ற கோவில்களைக் கட்டினார்.


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


3. தென்னிந்தியக் கோவில்களுக்கு செல்வங்களை வழங்கி கோவில்களின் நுழைவாயில்களில் கோபுரங்களை நிறுவினார். அவை ராயகோபுரம் என அழைக்கப்பட்டன.
4. வலிமைமிக்க பல கோட்டைகளை கட்டினார்.
5. அரேபியா மற்றும் ஈரானிலிருந்து குதிரைகளை இறக்குமதி செய்தார்.
6. போர்த்துக்கீசிய மற்றும் அராபிய வணிகர்களுடன் நட்பு பாராட்டி சுங்கவரிகள் மூலம் நாட்டின் வருமானத்தை அதிகரித்தார்.
7. அவர்கள் அவையில் அஷ்டதிக்கஜங்கள் என்று அழைக்கப்பட்ட எட்டு இலக்கிய மேதைகள் அவரின் அவையை அலங்கரித்தனர்.
8. அவர்களுள் முக்கியமானவர் அல்லசானி பெத்தண்ணா மற்றும் தெனாலிராமன் ஆவார்.

## VIII. உயர் சிந்தனை வினா :

**1. விஜயநகர் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்கள் மற்றும் பாமினி சுல்தான்களின் பங்களிப்பை ஆராய்க.**

**விடை: விஜயநகரப் பேரரசு வீழ்ச்சிக்கான காரணங்கள் :**

1. கிருஷ்ண தேவராயருக்குப் பின் விஜயநகருக்கு எதிராக போர் புரிவதற்காகத் தக்காண சுல்தான்கள் ஓர் அணியில் திரண்டனர்.
2. எதிரிகளின் கூட்டுப்படைகள் 1565ல் தலைக்கோட்டை என்னுமிடத்தில் விஜயநகரை எதிர்கொண்டன. இதில் விஜயநகரம் தோற்கடிக்கப்பட்டது.
3. விஜயநகரம் இருந்த இடம் தற்போது ஹம்பி என அழைக்கப்படுகிறது.
4. பாமன்ஷாவைத் தொடர்ந்து முதலாம் முகமதுஷா அரச பதவி ஏற்றார். விஜயநகரோடு அவர் மேற்கொண்ட இருபோர்களினால் பயனேதும் ஏற்படவில்லை. ஆனால் 1368ல் வாரங்கல் அரசரோடு போரிட்டதின்மூலம் கோல்கொண்டா கோட்டை, பச்சை கலந்த நீலவண்ணம் கற்களால் செய்யப்பட்ட சிம்மாசனம் இழப்பீடாக பெற்றார். இச்சிம்மாசனமே பாமினி சுல்தான்களின் அரியணை ஆயிற்று.

## IX. வரைபடம் :

**1. விஜயநகர் மற்றும் பாமினி அரசுகளின் எல்லைகளைக் குறிப்பிடுக.**





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

X. **கட்டக வினாக்கள் :**

| | |
|---|---|
| 1. 180 வருடத்திற்கு மேலாக ஆட்சிபுரிந்த 18 முடியரசுகளைப் பட்டியலிடுக. | 2. கிருஷ்ண தேவராயருக்குப் பிறகு ஆட்சியில் அமர்ந்த பாமினி சுல்தானைக் குறிப்பிடுக. |
| 3. கிருஷ்ணதேவராயர் சமஸ்கிருதத்தில் எழுதிய புத்தகத்தைக் கூறுக. | 4. ஹசன் பாமன் ஷா தமது தலைநகரை எங்கு மாற்றினார்? |

**1. விடை:** 1. மௌரிய பேரரசு
2. ஹரியங்கா வம்சம்
3. சிசுநாக வம்சம்
4. நந்த வம்சம்
5. சுங்க வம்சம்
6. கன்வ வம்சம்
7. குப்த பேரரசு
8. பாண்டிய பேரரசு
9. சேர பேரரசு
10. சோழ பேரரசு
11. விஜயநகரப் பேரரசு
12. சாளுக்ய பேரரசு
13. துளுவ பேரரசு
14. குலோத்துங்க பேரரசு
15. மகத பேரரசு
16. சாதவாகனர் பேரரசு
17. குஷாணப் பேரரசு
18. பல்லவ பேரரசு

**2. விடை:** முகமது ஷா
**3. விடை:** ஜாம்பவதி கல்யாணம்
**4. விடை:** குல்பர்காவிற்கு மாற்றினார்

IX. **மாணவர் செயல்பாடு :**

**1. தமிழ்நாட்டில் விஜயநகரப் பேரரசின் கலை மற்றும் கட்டடக் கலையின் வடிவில் அமைந்துள்ள கோவில்களைப் பற்றிய தகவல்களைச் சேகரித்து வருக.**



**விடை: கட்டிடக்கலை :**

போசாளர் மற்றும் திராவிடக் கட்டிடக் கலை கலந்து வடிக்கப்பட்ட விஜயநகரக் கோயில்கள் பெரும்பாலும் உறுதியான சுற்று மதில்களால் சூழப்பட்டவை. இவை மரம், செங்கல், சுண்ணாம்புச் சாந்து ஆகியவற்றைக் கொண்டு சோழர் பாணியில் அமைக்கப்பட்டன. கோபுரங்களில் தெய்வங்கள், முனிவர்கள், தேவதைகள் ஆகியோரின் சிற்பங்கள் அமைக்கப்பட்டு அழகூட்டப்பட்டது. பேலூரில் உள்ள சென்னகேசவர் கோயில், ஸ்ரீரங்கம், ஸ்ரீசைலம் ஆகிய இடங்களில் உள்ள இராய கோபுரங்களுக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும். மதில்களுக்குள் கருவறையைச் சுற்றிய கூரையிடப்பட்ட திருச்சுற்று, மகா மண்டபம் எனப்படும் தூண்களோடு கூடிய பெரிய மண்டபம், கல்யாண மண்டபம், வசந்த மண்டபம் மற்றும் திருக்குளம் என்பனவும் கோயில்களின் கூறுகள் ஆயின. தூண்களின் ஒரு புறத்தில், சுவற்றோடு ஒட்டியபடி நிமிர்ந்த நிலையில் யாளிகள், முதுகில் வீரர்கள் இருக்க, இரண்டு கால்களில் பாய்ந்தபடி நிமிர்ந்து நிற்கும் குதிரைகள் ஆகியவற்றின் சிற்பங்கள் காணப்படுகின்றன. தூணின் மறுபக்கங்களில் இந்துப் பழங்கதைகளை விளக்கும் சிற்பங்கள் செதுக்கப்பட்டிருக்கும்.

**2. வகுப்பறையில் தெனாலிராம கிருஷ்ணாவின் கதைகளை வகுப்பில் படித்துக் காட்டுக.**

**விடை:** மாணவர்கள் இச்செயல்பாட்டினை தாங்களாகவே செய்து பார்க்க வேண்டும்.

# அலகுத் தேர்வு

நேரம் : 45 நிமிடங்கள் மதிப்பெண் : 25

I **சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (3 × 1 = 3)

1. **மதுரை சுல்தானிய அரசை முடிவுக்குக் கொண்டு வந்தவர்**
அ) சாளுவ நரசிம்மர் ஆ) இரண்டாம் தேவராயர்
இ) குமார கம்பண்ணா ஈ) திருமலைதேவராயர்

2. **அஷ்டதிக்கஜங்கள் என்று அறியப்பட்ட எட்டு இலக்கிய மேதைகள் ________ அவையை அலங்கரித்தனர்.**
அ) ராமராயர் ஆ) அச்சுதராயர்
இ) கிருஷ்ணதேவராயர் ஈ) சதாசிவராயர்

3. **பாமினி அரசில் சிறந்த மொழியறிஞராகவும், கவிஞராகவும்விளங்கியவர்**
அ) அலாவுதீன் ஹசன்விரா ஆ) முகம்மது – I
இ) சுல்தான் பெரோஸ் ஈ) முஜாஹித்

II. **கோடிட்ட இடங்களை நிரப்புக.** (3 × 1 = 3)

1. ஆரவீடு வம்சத்தின் தலைநகரம் _______.
2. துளுவ வம்ச அரசர்களுள் மிகவும் போற்றுதலுக்கு உரியவர் ________ ஆவார்.
3. மகமது கவான் வெடிமருந்து தயாரிக்கவும் அதனைப் பயன்படுத்துவது பற்றி விளக்குவதற்காகவும் _______ வேதியியல் அறிஞர்களை வரச் செய்தார்.

III. **பொருத்துக.** (4 × 1 = 4)

| | அ | | ஆ |
|---|---|---|---|
| 1. | பாமினி சுல்தான்களின் கட்டடக்கலை | அ) | ஷாநாமா |
| 2. | கோல்கொண்டா கோட்டை | ஆ) | ஹசன் கங்கு |
| 3. | பிர்தௌசி | இ) | ஹைதராபாத் |
| 4. | அலாவுதீன் ஹசன் | ஈ) | குல்பர்கா |

IV. **(அ) கூற்றைக் காரணத்தோடு பொருத்துக : பொருத்தமான விடையை (✓) டிக் இட்டுக் காட்டவும்.** (2 × 1 = 2)

1. **கூற்று : இந்தியாவில் விஜயநகர அரசின் இராணுவம் அச்சுறுத்தக் கூடியதாக இருந்தது.**
**காரணம் : விஜயநகர இராணுவம் பீரங்கிபடை மற்றும் குதிரைப்படையை கொண்டிருந்தது.**
அ) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல
ஆ) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்
இ) காரணம் மற்றும் கூற்று தவறு
ஈ) காரணம் மற்றும் கூற்று சரி

2. **தவறான இணையைக் கண்டறியும்.**
அ) பட்டு – சீனா
ஆ) வாசனைப் பொருட்கள் – அரேபியா
இ) விலைமதிப்பற்ற கற்கள் – பர்மா
ஈ) மதுரா விஜயம் – கங்கா தேவி

V. **சரியா? தவறா?** (2 × 1 = 2)

1. விஜயநகரப் பேரரசில் அரசுரிமை என்பது பரம்பரையாகவும், பிறப்புரிமையின் அடிப்படையிலும் வழங்கப்பட்டது.
2. சிகாபுதீன் முகமது 1518 இறக்கும் வரை சுல்தானாக ஆட்சி புரிந்தார்.

**VI. ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் விடையளிக்கவும்.** (3 × 2 = 6)

1. விஜயநகர அரசின் அரசமைப்பு முறையைப் பற்றி எழுதுக.
2. விஜயநகர மற்றும் பாமினி அரசுகளுக்கிடையே மோதல்கள் ஏற்படக் காரணம் என்ன?
3. கோல்கொண்டா கோட்டை பற்றி குறிப்பு தருக.

**VII. விரிவாக விடையளிக்கவும் :** (1 × 5 = 5)

1. கிருஷ்ண தேவராயரின் பணிகள் மற்றும் சாதனைகளைக் குறிப்பிடுக.

## விடைகள்

I) 1. இ) குமார கம்பண்ணா 2. இ) கிருஷ்ணதேவராயர் 3. இ) சுல்தான் பெரோஸ்

II) 1. பெனுகொண்டா 2. கிருஷ்ணதேவராயர் 3. பாரசீக

III) 1. 1-ஈ, 2-இ, 3-அ, 4-ஆ

IV) 1. ஆ) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்
2. ஆ) வாசனைப் பொருட்கள் – அரேபியா

V) 1. சரி 2. சரி

VI) 1. பார்க்க சுராவின் கையேடு புத்தக வினா VI - 3
2. பார்க்க சுராவின் கையேடு கூடுதல் வினா VI - 1
3. பார்க்க சுராவின் கையேடு கூடுதல் வினா VI - 5

VII) 1. பார்க்க சுராவின் கையேடு புத்தக வினா VII - 1

☆ ☆ ☆

www.surabooks.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores



# அலகு 1

# வளங்கள்

## மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**

**1. கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் புதுப்பிக்கக் கூடிய வளம் ________.**

அ) தங்கம் ஆ) இரும்பு இ) பெட்ரோல் ஈ) சூரிய ஆற்றல்

**[விடை: ஈ) சூரிய ஆற்றல்]**

**2. மிகப்பெரிய சூரிய ஆற்றல் திட்டம் இந்தியாவில் எங்கு அமைந்துள்ளது?**

அ) கமுதி ஆ) ஆரல்வாய்மொழி

இ) முப்பந்தல் ஈ) நெய்வேலி **[விடை: அ) கமுதி]**

**3. மனிதனால் முதலில் அறியப்பட்டு பயன்படுத்தப்பட்ட உலோகங்களில் ஒன்று ________.**

அ) இரும்பு ஆ) தாமிரம் இ) தங்கம் ஈ) வெள்ளி **[விடை: ஆ) தாமிரம்]**

**4. ________ மின் மற்றும் மின்னணுத்துறையில் பயன்படுத்தப்படும் தவிர்க்க முடியாத கனிமங்களுள் ஒன்று.**

அ) சுண்ணாம்புக்கல் ஆ) மைக்கா

இ) மாங்கனீசு ஈ) வெள்ளி **[விடை: ஆ) மைக்கா]**

**5. நிலக்கரியிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் ________.**

அ) வெப்பசக்தி ஆ) அணுசக்தி இ) சூரிய சக்தி ஈ) நீர் ஆற்றல்

**[விடை: அ) வெப்பசக்தி]**

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. நீர் மின் ஆற்றலின் மிகப்பெரிய உற்பத்தியாளர் ________. **[விடை: சீனா]**
2. தமிழ்நாட்டில் இரும்பு தாதுக்கள் காணப்படும் இடம் ________. **[விடை: கஞ்சமலை]**
3. பாக்ஸைட் தாதுவிலிருந்து பிரித்தெடுக்கப்படும் உலோகம் ________. **[விடை: அலுமினியம்]**
4. மின்சார பேட்டரிகள் தயாரிக்க ________ பயன்படுகிறது. **[விடை: மாங்கனீசு]**
5. பெட்ரோலியம் மற்றும் அதன் மூலம் கிடைக்கபெறுபவை ________ என அழைக்கப்படுகிறது. **[விடை: கருப்புத் தங்கம்]**

**III. பொருத்துக.**

| அ | ஆ |
|---|---|
| புதுப்பிக்கக்கூடிய வளம் | இரும்பு |
| உலோக வளம் | மைக்கா |
| அலோக வளம் | காற்றாற்றல் |
| புதை படிம எரிபொருள் | படிவுப்பாறை |
| சுண்ணாம்புக்கல் | பெட்ரோலியம் |

**விடை:**

| அ | ஆ |
|---|---|
| புதுப்பிக்கக்கூடிய வளம் | காற்றாற்றல் |
| உலோக வளம் | இரும்பு |
| அலோக வளம் | மைக்கா |
| புதை படிம எரிபொருள் | பெட்ரோலியம் |
| சுண்ணாம்புக்கல் | படிவுப்பாறை |



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

## IV. பின்வரும் கூற்றினை கருத்தில் கொண்டு பொருத்தமான பதிலைத் தேர்ந்தெடுக்கவும்.

**1. கூற்று : காற்றாற்றல் ஒரு தூய்மையான ஆற்றல்**
**காரணம் : காற்று விசையாழிகள் எந்த உமிழ்வையும் உற்பத்தி செய்யாது.**

அ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது
ஆ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்கவில்லை
இ) கூற்று தவறு, காரணம் சரி
ஈ) கூற்று காரணம் இரண்டும் தவறு

**[விடை: அ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது]**

**2. கூற்று : இயற்கை வாயு பெட்ரோலிய படிவங்களுடன் காணப்படுகிறது.**
**காரணம் : வீடு மற்றும் தொழிற்சாலைகளில் எரிபொருளாகப் பயன்படுத்தலாம்.**

அ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றினை விளக்குகிறது
ஆ) கூற்று மற்றும் காரணம் சரி ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை
இ) கூற்று தவறு, காரணம் சரி
ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு

**[விடை: ஆ) கூற்று மற்றும் காரணம் சரி ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை]**

## V. பின்வருவனவற்றிற்கு விடையளிக்கவும்.

**1. வளங்கள் - வரையறு.**

**விடை:** ஒரு நாட்டின் சமூக, பொருளதார அரசியல் வலிமையானது அந்நாட்டின் வளங்களின் பரவல், பயன்பாடு மற்றும் அவற்றைப் பாதுகாத்தலைச் சார்ந்து அமையும். மனிதனின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியவை வளங்கள் என அழைக்கப்படுகின்றன.

**2. இரும்பின் பயன்கள் யாவை?**

**விடை:** இரும்பானது மலிவு விலை மற்றும் வலிமையினாலும் இன்ஜினியரிங் தொழில் துறையில் அதாவது இயந்திர கட்டுமானப் பணி இயந்திர கருவிகள், ஆட்டோமொபைல்ஸ், கப்பல் கட்டுமானப் பணி, பாலம் மற்றும் கட்டட கட்டுமானப் பணிகளில் முக்கியப்பங்கு வகிக்கிறது.

**3. உலகில் சூரிய ஆற்றலை பயன்படுத்துவதில் முதன்மையான நாடுகள் யாவை?**

**விடை:** உலகின் சூரிய ஆற்றலை பயன்படுத்துவதில் முதன்மையான நாடுகள் சீனா, அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி, இந்தியா, இத்தாலி, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, பிரான்சு, தென் கொரியா.

**4. கார்பன் உள்ளடக்கத்தின் அடிப்படையில் நிலக்கரியின் வகைகளைக் கூறு.**

**விடை:** கார்பன் உள்ளடக்கத்தின் அடிப்படையில் நிலக்கரியின் வகைகள் :

1. ஆந்த்ரசைட் (Anthracite)
2. பிட்டுமினஸ் (Bituminous)
3. லிக்னைட் (Lignite)
4. பீட் (Peat)

**5. துராலுமின் குறித்து சிறுகுறிப்பு வரைக.**

**விடை:**
1. செம்பு, சிலிக்கான், மெக்னீசியம் மற்றும் மாங்கனீசு ஆகியவற்றைக் கொண்ட துராலுமின் இலகுவான மற்றும் வலுவான அலுமினிய உலோகக் கலவைகள் ஆகும்.
2. இது விமான உற்பத்தியில் பயன்படுத்தப்படுகின்றன.

## VI. பின்வருவனவற்றை வேறுபடுத்தி எழுதுக.

**1. உயிருள்ள வளங்கள் - உயிரற்ற வளங்கள்**

**விடை:**

| வ. எண். | உயிருள்ள வளங்கள் | உயிரற்ற வளங்கள் |
|---|---|---|
| 1. | உயிர்க்கோளத்திலிருந்து பெறப்பட்ட மற்றும் உயிர்களைக் கொண்ட வளங்களை உயிரியல் வளங்கள் என்று அழைக்கிறார்கள். | உயிரற்ற பொருட்களிலிருந்து பெறப்பட்ட ஒருவகை வளங்கள் உயிரற்ற வளங்கள் என அழைக்கப்படுகின்றன. |
| 2. | உதாரணமாக மனிதர்கள், விலங்குகள் மற்றும் தாவரங்கள். | உதாரணமாக நீர், தாதுக்கள், உலோகங்கள், காற்று, சூரிய சக்தி போன்றவை. |



www.surabooks.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores


**2. புதுப்பிக்கக் கூடிய வளங்கள் - புதுப்பிக்க இயலா வளங்கள்**

விடை:

| எண். | புதுப்பிக்கக் கூடிய வளங்கள் | புதுப்பிக்க இயலா வளங்கள் |
|---|---|---|
| 1. | புதுப்பிக்கத்தக்க வளங்கள் என்பவை இயற்கையான செயல்பாடுகளாலோ, காலவோட்டத்தில் மீண்டும் நிறைவு செய்யப்பட கூடியனவாகவோ அமையும் வளங்களாகும். | புதுப்பிக்க இயலா வளங்கள் என்பவை, இயற்கையாக மீண்டும் புதுப்பிக்க முடியாத அல்லது காலவோட்டத்தில் மீண்டும் நிறைவு செய்ய இயலாத இயற்கை வளங்கள் ஆகும். |
| 2. | இவ்வளங்களை உற்பத்தி செய்வதாலும் பயன்படுத்துவதாலும் மாசு ஏற்படாது. | இவ்வளங்கள் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தும். |
| 3. | **(எ.கா)** சூரிய ஆற்றல், காற்று ஆற்றல், நீர் ஆற்றல். | **(எ.கா)** நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கை வாயு முதலியன. |

**3. உலோக வளங்கள் - அலோக வளங்கள்**

விடை:

| எண். | உலோக வளங்கள் | அலோக வளங்கள் |
|---|---|---|
| 1. | உலோக வளங்கள் என்பவை உலோகத்தால் ஆன வளங்கள் ஆகும் | உலோகத்தினைக் கொண்டிராத வளங்கள் அலோக வளங்கள் என அழைக்கப்படுகின்றன. |
| 2. | இவை வெப்பம் மற்றும் மின்சாரத்தினை எளிதில் கடத்தும் கடினப்பொருள்களாகும். | இவை கடினமான பொருள்கள் அல்ல, மின்சாரத்தையும், வெப்பத்தையும் எளிதில் கடத்துபவையும் அல்ல. |
| 3. | **(எ.கா)** இரும்பு, தாமிரம், தங்கம், பாக்ஸைட், வெள்ளி மற்றும் மாங்கனீசு முதலியன. | **(எ.கா)** மைக்கா, சுண்ணாம்புக்கல், ஜிப்சம், போல்மைப் பாஸ்பேட் முதலியன. |

## VII. காரணம் கூறுக.

**1. அலுமினியம் மற்ற உலோகங்களுடன் ஒப்பிடும்போது பரவலான பயன்பாட்டினைக் கொண்டுள்ளது.**

விடை:1. அலுமினியமானது எடை குறைந்த கடினமான மற்றும் விலை குறைந்தது என்பதால் உலக அளவில் கட்டுமானப்பணிக்கு பிரபலமான ஒன்றாகி விட்டது.

2. இது முக்கியமாக விமானங்கள், கப்பல்கள், ஆட்டோமொபைல்கள், தொடர்வண்டி பெட்டிகள் தயாரிப்பதில் பயன்படுகிறது. மின்சாரக்கம்பி வடங்கள் தயாரிக்கப்படுகின்றன. எனவே அலுமினியம் மற்ற உலோகங்களுடன் ஒப்பிடும்போது பரவலான பயன்பாட்டினைக் கொண்டுள்ளது.

**2. நீர் ஒரு சிறந்த ஆற்றல் மூலமாக கருதப்படுகிறது.**

விடை:1. நீரானது ஒரு முக்கிய ஆற்றல் ஆதாரமாகக் கருதப்படுகிறது. தற்போது நீரானது நீர்மின்சக்தி உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகிறது.

2. நீர் மின்சக்தி, அதிக திசை வேகத்துடன் நகரும் நீர் மற்றும் பெரிய நீர்வீழ்ச்சிகளில் விசையாழிகள் மற்றும் மின்மாற்றிகள் மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது.

3. நீர் மின்சக்தியானது மலிவானதாகவும் மற்றும் மிகவும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் உள்ளது.

## VIII. விரிவாக விடையளிக்க.

**1. புதுப்பிக்கக்கூடிய வளங்களின் வெவ்வேறு வகைகளை விளக்குக.**

விடை: புதுப்பிக்கக்கூடிய வளங்களின் வகைகள் :

1. சூரிய ஆற்றல்
2. காற்று ஆற்றல்
3. நீர் ஆற்றல்

**சூரிய ஆற்றல் :**

1. சூரியன் தனது ஆற்றலை வெப்பமாகவும், ஒளியாகவும் வெளிவிடுகிறது.
2. இவ்வாற்றல் சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்காது.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores


3. சூரியகலமானது நேரடியாகச் சூரிய ஆற்றலை மின்னாற்றலாக மாற்றக்கூடியது.
4. சூரிய ஒளி மின்தட்டின்மூலம் பெறப்படும் மின்னாற்றலானது, கணிப்பானை (Calculator) மின்னூட்டம் (Charge) செய்வதிலிருந்து குடியிருப்புப் பகுதிகளுக்கு மின்சாரம் அளிக்கும் வரையிலும் செயலாற்றுகிறது.
5. **(எ.கா)** கமுதி சூரிய ஒளி மின்சக்தி – இராமநாதபுரம் மாவட்டம்.

**காற்று ஆற்றல் :**

1. காற்று ஆற்றல் என்பது ஒரு தூய்மையான ஆற்றல் ஆகும். இவை சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிப்பதில்லை.
2. மிகவும் சிக்கனமான மற்றும் புதுப்பிக்கக்கூடிய ஆற்றல் தொழில் நுட்பங்களில் ஒன்றாகி விட்டது.
3. கிளாசிக் டச்சு காற்றாலையானது நூறாண்டுகளாகக் காற்றாற்றலை பயன்படுத்தியது.
4. இன்றைய நிலப்பரப்பைக் குறிக்கும் மூன்று சக்திகள் கொண்ட நவீன காற்று விசையாழிகள் காற்றினை மின்சாரமாக மாற்றுகின்றன.
5. அமெரிக்க ஐக்கிய நாடுகள், சீனா, ஜெர்மனி, ஸ்பெயின், இந்தியா, இங்கிலாந்து, கனடா மற்றும் பிரேஸில் போன்றவை காற்றாற்றலை உற்பத்தி செய்யும் உலகின் முக்கிய நாடுகள் ஆகும்.

**நீர் மின்சக்தி :**

1. நீரானது ஒரு முக்கிய ஆற்றல் ஆதாரமாகக் கருதப்படுகிறது.
2. தற்போது நீரானது நீர்மின் சக்தி உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகிறது.
3. நீர்மின் சக்தி, அதிக திசை வேகத்துடன் நகரும் நீர் மற்றும் பெரிய நீர்வீழ்ச்சிகளில் விசையாழிகள் மற்றும் மின்மாற்றிகள் மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது.
4. ஆற்றல் வளங்களிலேயே நீர்மின் சக்தியானது, மலிவானதாகவும் மற்றும் மிகவும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவும் உள்ளது.
5. சீனா, கனடா, பிரேசில், அமெரிக்க ஐக்கிய நாடுகள் ரஷ்யா, இந்தியா, நார்வே மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் நீர்மின்சக்தி உற்பத்தி செய்யும் நாடுகள் ஆகும்.
6. அதிக அளவில் நீர்மின் சக்தி உற்பத்தி செய்யும் நாடு சீனா ஆகும்.

**2. புதுப்பிக்க இயலா வளங்கள் - குறித்து விரிவாக எழுதுக.**

விடை:1. புதுப்பிக்க இயலா வளங்கள் என்பவை இயற்கையாக மீண்டும் புதுப்பிக்க முடியாத அல்லது காலவோட்டத்தில் மீண்டும் நிறைவு செய்ய இயலாத வளங்கள் ஆகும்.

2. புதுப்பிக்க இயலா வளங்கள் மூன்று வகைப்படும். அவை
   1. உலோக வளங்கள்
   2. அலோக வளங்கள்
   3. புதைபடிம எரிபொருள்

**உலோக வளங்கள் :**

1. உலோக வளங்கள் என்பவை உலோகத்தால் ஆன வளங்கள் ஆகும்.
2. இவை வெப்பம் மற்றும் மின்சாரத்தினை எளிதில் கடத்தும் கடினப் பொருளாகும்.
3. **(எ.கா)** இரும்பு, தாமிரம், தங்கம், பாக்ஸைட், வெள்ளி மற்றும் மாங்கனீசு ஆகும்.

**அலோக வளங்கள் :**

1. உலோகத்தினைக் கொண்டிராத வளங்கள் அலோக வளங்கள் என அழைக்கப்படுகின்றன.
2. இவை கடினமான பொருள்கள் அல்ல, மின்சாரத்தையும், வெப்பத்தையும் எளிதில் கடத்துபவையும் அல்ல.
3. **(எ.கா)** மைக்கா, சுண்ணாம்புக்கல், ஜிப்சம், போலமைப் பாஸ்பேட் முதலியன.

**புதைபடிம எரிபொருள் வளங்கள் :**

1. பொதுவாக புதைபடிம எரிபொருள் வளங்களானது இறந்துபோன தாவர மற்றும் விலங்குகளின் எச்சங்களிலிருந்து உருவானவை.
2. புதைபடிம எரிபொருள்கள் ஹைட்ரோகார்பனிலிருந்து உண்டானவை எனப் பெரும்பாலும் குறிப்பிடப்படுகிறது.
3. இவை எரிக்கப்படும்போது வெப்ப ஆற்றலுக்கான ஒரு சிறந்த ஆதாரமாகிறது.
4. புதைபடிம எரிபொருள் வளங்களாவன நிலக்கரி, பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு.


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

**3. புதை படிம எரிபொருள் வளங்கள் யாவை? அவற்றை விளக்குக.**

**விடை:** புதைபடிம எரிபொருள் வளங்களாவன நிலக்கரி, பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு.

**நிலக்கரி :**

1. நிலக்கரி என்பது தொல்லுயிர் எச்சங்களில் இருந்து உருவாகும் திண்ம எரிபொருள் ஆகும்.
2. முற்றா நிலக்கரி அல்லது பீட் (peat) முதலில் உருவாவது ஆகும்.
3. நிலக்கரி இவை வீட்டு எரிபொருளாக இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலை மற்றும் மின்சாரத்தை உற்பத்தி செய்யப் பயன்படும் உருளைகளிலும் நீராவி இன்ஜின்களிலும் பயன்படுத்தப்படுகிறது.
4. உலகின் முன்னணி நிலக்கரி உற்பத்தி செய்யும் நாடு சீனா ஆகும்.
5. இந்தியாவில் நிலக்கரி உற்பத்தி செய்யும் இடங்கள் மேற்கு வங்கத்தில் உள்ள ராணிகஞ்ச், தமிழகத்தில் உள்ள நெய்வேலி, ஜார்கண்டில் உள்ள ஜாரியா, தன்பாத் மற்றும் பொக்காரோ ஆகும்.

**பெட்ரோலியம் :**

1. பாறைகளின் அடுக்குகளுக்கு இடையேயும், கடல் மற்றும் கடலோரப் பகுதிகளில் அமைந்துள்ள எண்ணெய் வயல்களில் இருந்தும் துளையிட்டு பெட்ரோலியம் எடுக்கப்படுகிறது.
2. டீசல், பெட்ரோல், மண்ணெண்ணெய், மெழுகு, பிளாஸ்டிக் போன்றவை பெட்ரோலியப் பொருட்களாகும்.
3. பெட்ரோலியம் மற்றும் அதன் உபப்பொருள்கள் மதிப்புமிக்கதாக உள்ளதால் 'கருப்பு தங்கம்' என அழைக்கப்படுகிறது.
4. பெட்ரோலியம் உற்பத்தி செய்யும் முதன்மை நாடுகள் சவுதி அரேபியா, ஈரான், ஈராக் மற்றும் கத்தார் ஆகும்.
5. அஸ்ஸாமில் உள்ள திக்பாய், மும்பையில் டெல்டா பகுதிகள் இய்தியாவில் பெட்ரோலியம் உற்பத்தி செய்யும் முன்னணி பகுதிகளாகும்.

**இயற்கை வாயு :**

1. இயற்கை வாயுவானது பெட்ரோலியம் படிவுகளுடன் காணப்படுகிறது.
2. இது வீடு மற்றும் தொழிற்சாலைகளில் எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகிறது.
3. உலக அளவில் 50% ற்கும் அதிகமான இயற்கை வாயு இருப்புகள் அமெரிக்க ஐக்கிய நாடுகள் ரஷ்யா, ஈரான் மற்றும் கத்தாரில் உள்ளது.
4. இந்தியாவில் கிருஷ்ணா மற்றும் கோதாவரி டெல்டா, அஸ்ஸாம், குஜராத் மற்றும் மும்பையின் சில கடலோரப் பகுதிகளில் இயற்கை வாயு வளம் அமைந்துள்ளது.

## IX. செயல்பாடு

**1. கொடுக்கப்பட்டுள்ள உலக நில வரைபடத்தில் உலோக வளங்கள் பரவிக் கிடைக்கும் இடங்களைக் குறித்திடுக.**

**விடை:**



www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores

K

## இரண்டாம் பருவ பொதுத் தொகுத்தறித் தேர்வு-2019

பதிவு எண்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

## ஏழாம் வகுப்பு
## சமூக அறிவியல்

நேரம் : 2.00 மணி | மதிப்பெண்கள் : 60

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** (10 × 1 = 10)

1. சங்கம வம்சத்தின் மிகச்சிறந்த ஆட்சியாளர் யார்?
   அ) புக்கர் ஆ) தேவராயர்
   இ) ஹரிஹரர் – II ஈ) கிருஷ்ண தேவராயர்

2. இந்தியாவில் பாரசீகக் கட்டிட முறையை அறிமுகப்படுத்தியவர் யார்?
   அ) ஹீமாயூன் ஆ) பாபர் இ) ஜஹாங்கீர் ஈ) அக்பர்

3. அக்பரின் வருவாய்த்துறை அமைச்சர் யார்?
   அ) பீர்பால் ஆ) ராஜா பகவாதாஸ்
   இ) இராஜதோடர்மால் ஈ) இராஜாமான்சிங்

4. சிவாஜியின் ஆசிரியராகவும் மற்றும் பாதுகாவலராகவும் இருந்தவர் யார்?
   அ) தாதாஜி கொண்டதேவ் ஆ) கவிகலாஷ்
   இ) ஜீஜாபாய் ஈ) ராம்தாஸ்

5. மிகப்பெரிய சூரிய ஆற்றல் திட்டம் இந்தியாவில் எங்கு அமைந்துள்ளது?
   அ) கமுதி ஆ) ஆரல்வாய்மொழி இ) முப்பந்தல் ஈ) நெய்வேலி

6. பின்வருவனவற்றில் இந்தியாவில் இல்லாத கடற்கரை எது?
   அ) கோவா ஆ) கொச்சி இ) கோவளம் ஈ) மியாமி

7. இந்தியாவிலுள்ள மொத்த மாநிலங்களின் எண்ணிக்கை
   அ) 26 ஆ) 27 இ) 28 ஈ) 29

8. சரியா? தவறா?
   சிவாஜி புரந்தரை முகலாயர்களிடமிருந்து கைப்பற்றினார்.

9. பொருந்தாததை வட்டமிடுக :
   செய்தித்தாள்கள், நாளிதழ்கள், சுவரொட்டிகள், கைப்பேசி

10. கூற்று (A) : காற்றாற்றல் ஒரு தூய்மையான ஆற்றல்
    காரணம் (R) : காற்று விசையாழிகள் எந்த உமிழ்வையும் உற்பத்தி செய்யாது.
    அ) A மற்றும் R சரி காரணம் கூற்றை விளக்குகிறது.
    ஆ) A மற்றும் R சரி காரணம் கூற்றை விளக்கவில்லை
    இ) A தவறு R சரி ஈ) A மற்றும் R தவறு

**II. கோடிட்ட இடம் :** (5 × 1 = 5)

11. விஜயநகரப் பேரரசர்களால் உருவாக்கப்பட்ட நாணயங்களுக்கு _________ என்று பெயர்.
12. ராணா பிரதாப்பின் குதிரையின் பெயர் _________ ஆகும்.
13. பேஷ்வாக்களின் முக்கிய வருவாய் அலுவலர் _________ .



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores



14. தமிழ்நாட்டில் இரும்பு தாதுக்கள் காணப்படும் இடம் ________ .
15. இரண்டாவது அழகிய நீண்டக் கடற்கரை ________ .

**III. பொருத்துக :** (6 × ½ = 3)

16. தீன் – இலாஹி – தலைமைச் செயலகம்
17. அப்துல் ரசாக் – அக்பர்
18. அப்சல்கான் – கூகுள் இணையம்
19. புதைபடிம எரிபொருள் – பாரசீக சிற்பக் கலைஞர்
20. புனித ஜார்ஜ் கோட்டை – பீஜப்பூர் தளபதி
21. இணைய ஊடகம் – பெட்ரோலியம்

**IV. எவையேனும் 8 வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடையளி :** (8 × 2 = 16)

22. தக்காண சுல்தானத்தின் 5 சுதந்திர அரசுகள் யாவை?
23. தலைக்கோட்டைப் போரைப் பற்றி எழுதுக.
24. மன்சப்தாரி – குறிப்பு வரைக.
25. சௌத் மற்றும் சர்தேஷ்முகி
26. மராத்தியர்களிடத்தில் பக்தி இயக்கத்தின் தாக்கம்
27. உலகில் சூரிய ஆற்றலை பயன்படுத்துவதில் முதன்மையான நாடுகள் யாவை?
28. நிலக்கரியின் வகைகளை கூறுக.
29. இந்தியாவிலுள்ள ஏதேனும் ஐந்து மலை வாழிடங்களின் பெயர்களை எழுதுக.
30. சுற்றுலா வரையறுக்க.
31. லோக் அதாலத் பற்றி எழுதுக.
32. சட்டமன்ற தொகுதி என்றால் என்ன?
33. ஊடகம் என்றால் என்ன?

**V. எவையேனும் 4 வினாக்களுக்கு மட்டும் விரிவான விடையளி :** (4 × 5 = 20)

34. கிருஷ்ண தேவராயரின் பணிகள் மற்றும் சாதனைகளை குறிப்பிடுக.
35. முகலாயர்களின் நிலவருவாய் முறையைப் பற்றி விவரி.
36. மராத்தியர்களின் ஆட்சியில் சிவாஜியின் சிறப்பு அம்சங்களை மதிப்பிடுக.
37. புதுப்பிக்கக்கூடிய வளங்களின் வெவ்வேறு வகைகளை விளக்குக.
38. வேறுபடுத்துக :
    அ) புதுப்பிக்கக்கூடிய வளங்கள் – புதுப்பிக்க இயலா வளங்கள்
    ஆ) பன்னாட்டுச் சுற்றுலா மற்றும் வரலாற்றுச் சுற்றுலா
39. ஆளுநரின் அதிகாரத்தை விவரிக்கவும்.
40. ஊடகத்தினால் ஏற்படும் நன்மைகள் யாவை?
41. a) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் குறிக்கவும். (6 × ½ = 3)
    i) கள்ளிக் கோட்டை ii) சூரத் iii) தலைக்கோட்டை
    iv) பானிப்பட் v) பீஜப்பூர் vi) தஞ்சாவூர்
42. கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் குறிக்கவும் (6 × ½ = 3)
    i) முண்டந்துறை ii) வேடந்தாங்கல் iii) கோடியக்கரை
    iv) முதுமலை v) கிண்டி vi) கூடங்குளம்

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores

7ஆம் வகுப்பு

# மூன்றாம் பருவம்

www.surabooks.com

# சமூக அறிவியல்

orders@surabooks.com

Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores

# சமூக அறிவியல்



| அலகு | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| | **வரலாறு** | |
| 1. | புதிய சமயக் கருத்துக்களும் இயக்கங்களும் | 161 - 168 |
| 2. | தமிழ்நாட்டில் கலையும் கட்டடக் கலையும் | 169 - 176 |
| 3. | தமிழகத்தில் சமணம், பௌத்தம், ஆசீவகத் தத்துவங்கள் | 177 - 185 |
| | **புவியியல்** | |
| 1. | கண்டங்களை ஆராய்தல் - வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்கா | 186 - 198 |
| 2. | நிலவரைபடத்தை கற்றறிதல் | 199 - 207 |
| 3. | இயற்கை இடர்கள் - பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகளை புரிந்து கொள்ளல் | 208 - 216 |
| | **குடிமையியல்** | |
| 1. | பெண்கள் மேம்பாடு | 217 - 223 |
| 2. | சந்தை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு | 224 - 230 |
| 3. | சாலைப் பாதுகாப்பு | 231 - 236 |
| | **பொருளியல்** | |
| 1. | வரி மற்றும் அதன் முக்கியத்துவம் | 237 - 244 |
| | மூன்றாம் பருவத் தொகுத்தறி மதிப்பீடு (SA) - மே 2022 வினாத்தாள் விடைகளுடன் | 245 - 252 |





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com
www.surabooks.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores



# அலகு 1 புதிய சமயக் கருத்துக்களும் இயக்கங்களும்

## மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. **கீழ்க்காண்பவருள் யார் தன்னை தாய் யசோதாவாக பாவித்துக் கொண்டு கிருஷ்ணனின் மேல் பாடல்களைப் புனைந்துள்ளார்?**
அ) பொய்கை ஆழ்வார் ஆ) பெரியாழ்வார்
இ) நம்மாழ்வார் ஈ) ஆண்டாள் **[விடை: ஆ) பெரியாழ்வார்]**

2. ***அத்வைதம்* எனும் தத்துவத்தை போதித்தவர் யார்?**
அ) இராமானுஜர் ஆ) இராமாநந்தர்
இ) நம்மாழ்வார் ஈ) ஆதி சங்கரர் **[விடை: ஈ) ஆதி சங்கரர்]**

3. **பக்திச் சிந்தனையை ஒரு மக்கள் இயக்கமாக வட இந்தியாவில் பரவச் செய்தவர் யார்?**
அ) வல்லபாச்சாரியார் ஆ) இராமானுஜர்
இ) இராமாநந்தர் ஈ) சூர்தாஸ் **[விடை: இ) இராமாநந்தர்]**

4. **சிஸ்டி அமைப்பை இந்தியாவில் பிரபலமாக்கியவர் யார் ?**
அ) மொய்னுதீன் சிஸ்டி ஆ) சுரவார்டி
இ) அமீர் குஸ்ரு ஈ) நிஜாமுதின் அவுலியா
**[விடை: அ) மொய்னுதீன் சிஸ்டி]**

5. **சீக்கியர்கள் தங்களின் முதல் குரு என யாரைக் கருதுகின்றனர்?**
அ) லேனா ஆ) குரு அமீர் சிங்
இ) குரு நானக் ஈ) குரு கோவிந் சிங் **[விடை: இ) குரு நானக்]**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. பெரியாழ்வாரின் தொடக்ககாலப் பெயர் ________. **[விடை: விஷ்ணு சித்தர்]**
2. சீக்கியர்களின் புனிதநூல் ________ ஆகும். **[விடை: குரு கிரந்த்சாகிப்]**
3. மீராபாய் ________ என்பாரின் சீடராவார். **[விடை: ரவிதாஸ்]**
4. ________ என்பாரின் தத்துவம் விசிஷ்டாத்வைதம் என அறியப்படுகிறது. **[விடை: இராமானுஜர்]**
5. தர்பார் சாகிப் குருத்வாரா பாகிஸ்தானின் ________ என்ற இடத்தில் அமைந்துள்ளது. **[விடை: கர்தார்பூர்]**

**III. பொருத்துக.** **விடை:**

| | | | விடை |
|---|---|---|---|
| 1. | *பாகல்* | கபீர் | குரு கோவிந் சிங் |
| 2. | *இராமசரிதமானஸ்* | இராமானுஜர் | துளசிதாசர் |
| 3. | *ஸ்ரீவைஷ்ணவம்* | அப்துல் வகித் அபுநஜிப் | இராமானுஜர் |
| 4. | *கிரந்தவளி* | குரு கோவிந் சிங் | கபீர் |
| 5. | *சுரவார்டி* | துளசிதாசர் | அப்துல் வகித் அபுநஜிப் |


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores


IV.

**1. சரியான இணையைத் / இணைகளைத் தேர்ந்தெடுக்கவும்.**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆண்டாள் | – | திருவில்லிபுத்தூர் |
| 2. | துக்காராம் | – | வங்காளம் |
| 3. | சைதன்யதேவா | – | மகாராஷ்டிரா |
| 4. | பிரம்ம சூத்திரம் | – | வல்லபாச்சாரியார் |
| 5. | குருத்வாராக்கள் | – | சீக்கியர்கள் |

**[விடை: 1) ஆண்டாள் - திருவில்லிபுத்தூர், 5) குருத்வாராக்கள் - சீக்கியர்கள்]**

**2. கூற்று : குரு கோவிந் சிங்கிற்குப் பின்னர் புனித நூலான குரு கிரந்த் சாகிப் குருவாகக் கருதப்பட்டது.**

**காரணம் : குரு கிரந்த் சாகிப் நூலைத் தொகுத்தவர் குரு கோவிந் சிங்.**

அ) காரணம், கூற்றின் சரியான விளக்கமல்ல. ஆ) காரணம், கூற்றை சரியாக விளக்குகிறது.
இ) கூற்று சரி, காரணம் தவறு. ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு.

**[விடை: இ) கூற்று சரி, காரணம் தவறு]**

**3. பொருந்தாததைக் கண்டுபிடி.**

பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார். பெரியாழ்வார், ஆண்டாள் , நம்மாழ்வார். **[விடை: ஆண்டாள்]**

## V. சரியா? தவறா? காண்.

1. இஸ்லாமியப் பண்பாடு பரவ சூபியிஸம் காரணமாயிற்று. **[விடை: தவறு]**
2. இடைக்காலத்தின் தொடக்கத்தில் நன்கறியப்பட்டிருந்த சிஸ்டி அமைப்பைச் சார்ந்த சூபி, நிஜாமுதீன் அவுலியா என்பவராவார். **[விடை: சரி]**
3. குருநானக், சீக்கியர்களின் முதல் குருவாகக் கருதப்படுகிறார். **[விடை: சரி]**
4. கடவுளை உய்த்துணர உணர்சிகரமான பக்தியும் தீவிர தியானமுமே சாத்தியம் என சூபிக்கள் நம்பினர். **[விடை: சரி]**
5. அடிப்படை தமிழ் சைவப் புனித நூல்கள் 12 ஆகும். **[விடை: சரி]**

## VI. குறுகிய விடையளி.

**1. திருமுறை பற்றி நீவிர் அறிவது என்ன?**

விடை: 1. நாயன்மார்களின் பாடல்கள் அனைத்தும் சைவப்புனித நூல்களான திருமுறையின் அடிப்படையாக உள்ளது.
2. திருமுறை 12 நூல்களைக் கொண்டுள்ளது. அவற்றில் 11 நூல்கள் நம்பி ஆண்டார் நம்பியால் தொகுக்கப்பட்டவையாகும்.

**2. நாயன்மார்கள் மொத்தம் எத்தனை பேர்? அவர்களில் முக்கியமானோர் யாவர்?**

விடை: நாயன்மார்கள் மொத்தம் 63 பேர். அவர்களில் முக்கியமானோர் ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் (மும்மூர்த்திகள் என அழைக்கப்படுபவர்கள்) ஆவார்.

**3. சீக்கிய மதத்தைத் தோற்றுவிக்க குருநானக் எவ்விதம் உதவினார்?**

விடை: 1. கடவுள் வடிவமற்றவர் எனக் குரு நானக் போதித்தார், தன்னைப் பின்பற்றுவோர் அமைதிக்காகவும், வீடு பேற்றிற்காகவும் கடவுளை நினைத்து தியானம் செய்யும்படி கூறினார்.
2. அவர் சீக்கியர்களின் முதல் குருவாகக் கருதப்படுகிறார். வேதச் சடங்குகள், சாதிப் பாகுபாடுகள் ஆகியவை மீது அவர் பெரும் வெறுப்பும் கொண்டிருந்தார்.
3. குருநானக்கின் போதனைகளே பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நிறுவப்பட்ட சீக்கிய மதத்தின் மூலக்கோட்பாடாக அமைந்தது.

**4. பண்டரிபுரம் விதோபா கோவிலுக்கு, துக்காரம் எவ்விதம் பணியாற்றினார்?**

விடை: விஷ்ணுவின் அவதாரமான விதோபா குறித்து அவர் இயற்றிய ஆன்மீகப் பாடல்களுக்காகவே (அபங்கா அல்லது கீர்த்தனைகள்) அவர் நன்கு அறியப்பட்டிருந்தார். வங்காளத்திற்கு சைதன்ய தேவர் எவ்விதமோ அதைப்போன்றே மகாராஷ்டிராவுக்கு துக்காராம் விளங்குகிறார்.


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores


**5. கபீரின் சமயக்கருத்துக்கள் கீழ்நிலை சாதிகளைச் சார்ந்தோருக்கு ஏற்புடையதாயிற்று என்பதை முன்னிலைப்படுத்து.**

விடை:1. கபீரின் கருத்துக்கள் இந்து சமூகத்தில் குறிப்பாக கீழ்நிலை சாதிகளைச் சேர்ந்தோர்க்கு ஏற்புடையதாய் அமைந்தன.
2. பல்வேறு சமயப்பிரிவுகள் கடவுளுக்கு வெவ்வேறு பெயர்களையும், வடிவங்களையும் கொடுத்திருந்தாலும் கடவுள் ஒருவரே என்றும் வடிவமற்றவர் என்றும் கபீர் நம்பினார்.
3. சமயம், சாதி, செல்வம் ஆகியவற்றின் அடிப்படையிலான பாகுபாடுகளை அவர் கண்டனம் செய்தார். பொருளற்ற சடங்கு முறைகளையும் அவர் கண்டனம் செய்தார்.

## VII. விரிவான விடையளி.

**1. தென்னிந்திய மற்றும் வட இந்தியப் பகுதிகளில் பக்தி இயக்கத்திற்கு சான்றோர் பலரது பங்களிப்பினைப் பற்றிக் கூறு.**

விடை: **தமிழகத்தில் பக்தி இயக்கம்:**

1. பக்தி இயக்கத்தைத் தொடங்கிவைத்த வைணவ பக்தி அடியார்களான ஆழ்வார்களும் சிவனை வழிபடும் சைவர்களான நாயன்மார்களும் தமிழ்மொழியில் பக்திப்பாடல்களை இயற்றி தங்கள் கடவுளர்களுக்குச் சமர்ப்பித்தனர்.
2. பக்தி இயக்கத்தின் வளர்ச்சிக்குத் தாங்கள் செய்த பங்களிப்பின் காரணமாய் இரண்டு ஆழ்வார்கள் தனித்துவம் மிகுந்து காணப்படுகின்றனர்.
3. ஆதிசங்கரர் அல்லது சங்கராச்சாரியார் (ஏறத்தாழ கி.பி. 700 - 750) அத்வைதம் எனும் தத்துவத்தைப் போதித்தவராவார். ஞானத்தைப் பெறுவதன் வழியாக ஜீவாத்மா பரமாத்மாவுடன் (பிரம்மா) இணையும் என்பதே இத்தத்துவத்தின் சாரமாகும்.
4. பதினொன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த வைணவத் திருத்தொண்டரான ராமானுஜர் மிகவும் செல்வாக்குபெற்ற வைணவச் சிந்தனையாளர் ஆவர்.
5. 16, 17 ஆம் நூற்றாண்டுகளில் வைணவ சமயம் இந்தியா நெடுகிலும் பரவியது.

**அ) வட இந்தியாவில் பக்தி இயக்கம் :**

1. 14- ஆம் மற்றும் 15- ம் நூற்றாண்டுகளில் வட இந்தியாவில் இந்து சமயத் தலைவர்கள் இஸ்லாம் குறித்து இரு வேறுபட்ட கருத்துக்களை கொண்டு இருந்தனர்.
2. இரு பிரிவினரும் இஸ்லாமை எதிர்கொண்டு செயல் ஆற்றினர்.
3. ஒரு பிரிவினர் இஸ்லாமை பரிவோடு அணுகினர். மற்றொரு பிரிவினர் பகைமை பாராட்டினர்.

**ஆ) பக்தி இயக்கச் சான்றோர்கள் :**

1. வட இந்தியாவில் பக்தி இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றியவர் இராமநந்தர் ஆவார்.
2. வல்லபாச்சாரியார் மதுராவுக்கு அருகே கோவர்தன குன்றுகளில் கிருஷ்ணபகவானுக்கு ஒரு கோவிலை அமைத்தார்.
3. சூர்தாஸ் இக்கோவில் மற்றும் ஆக்ரா கோவிலோடும் தொடர்புடையவராவர்.
4. மீராபாய் கிருஷ்ணபகவானின் தீவிர பக்தையாவார். இவர் ரவிதாஸ் என்பவரின் சீடர் ஆவார். இவர் தனது பஜனைப் பாடல்கள் மூலம் பிரபலமானார்.
5. சைதன்யதேவர் தனது பாடல்கள் மற்றும் நடனங்கள் மூலம் கிருஷ்ண வழிப்பாட்டை பிரபலமாக்கினார்.
6. துளசிதாசரின் இராமசிரிதமானஸ் என்ற நூல் இராமரின் கதையை பற்றியதாகும். இவற்றில் உள்ள பாடல்கள் இன்றும் தொடர்ந்து பாடப்படுகின்றன.

**2. சூபியிஸம் என்றால் என்ன? அது இந்தியாவில் எவ்விதம் தடம் பதித்தது?**

விடை:1. சூபி எனும் சொல் சுப் என்னும் சொல்லில் இருந்து தோன்றியது ஆகும். அதன் பொருள் கம்பளி ஆகும்.
2. சூபிக்கள் சொர சொரப்பான முரட்டுக் கம்பளியாலான உடைகளை அணிந்ததால் சூபிக்கள் என அழைக்கப்பட்டனர்.
3. சூபியிஸம் அடிப்படையில் இஸ்லாமியத்தைச் சேர்ந்ததாக இருந்தாலும் அதன்மீது இந்து பௌத்த (மகாயான) சமயக் கருத்துக்களின் தாக்கத்தைப் பெற்றிருந்தது.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores


4. மடாலய வாழ்க்கையை ஒத்த துறவு வாழ்வை மேற்கொண்ட சூபிக்கள் சமுதாயத்திற்கு வெளியே செயல்பட்டனர்.

**இந்தியாவில் தடம் பதித்தல்:**

1. சிந்துவை அராபியர் கைப்பற்றிய காலத்தில் சூபியிஸம் இந்தியாவிற்குள் பாதம் பதித்தது.
2. யோகப் பயிற்சி, தோற்ற அமைவுகள், இந்திய இசை, நடனம் ஆகியவற்றையும் சூபியிஸம் கைக் கொண்டது.
3. சூபியிஸத்தை பின்பற்றியோர் இஸ்லாம், இந்து ஆகிய இரு சமயங்களையும் சேர்ந்தவர்களாக இருந்தனர்.
4. இடைக்கால இந்தியாவைச் சேர்ந்த சூபிக்கள் மூன்று முக்கிய அமைப்பினராகப் பிரிக்கப்பட்டிருந்தனர். அவை சிஸ்டி, சுரவார்டி, பிர்தௌசி என்பனவாகும்.
5. மொய்னுதீன் சிஸ்டி, சிஸ்டி அமைப்பை இந்தியாவில் பிரபலமாக்கினார்.
6. சுரவார்டி அமைப்பைத் தோற்றுவித்தவர் ஈரானைச் சேர்ந்த சூபியான அப்துல்-வகித் அபு நஜிப் என்பவராவார்.

**3. இந்திய சமூகத்தில் பக்தி இயக்கம் எவ்விதத் தாக்கத்தை ஏற்படுத்தியது?**

விடை: **இந்திய சமூகத்தில் பக்தி இயக்கத்தின் தாக்கம் :**

1. இந்து சமயத்திற்குப் புத்துயிர் ஊட்டப்பட்டது. அதனால் அது இஸ்லாமின் தாக்குதல்களிலிருந்து காக்கப்பட்டது.
2. பக்தி இயக்கம் சாமானிய மக்களின் இயக்கமாகும். அவ்வியக்கம் தனது பக்தி இலக்கியங்களை எழுத அம்மக்களின் மொழியையேப் பயன்படுத்தியது.
3. இந்திய மொழிகள் வளர்வதற்கான இடத்தை பக்தி இயக்கம் ஏற்படுத்திக் கொடுத்தது.
4. சரிவை சந்தித்துக் கொண்டிருந்த சமஸ்கிருத மொழி இந்து அரசுகளின் அரசர்கள் நல்கிய ஆதரவால் தக்கவைக்கப்பட்டது.
5. இக்காலப் பகுதியில் உயிர்துடிப்புடன் விளங்கிய ஒரே பழமையான மொழி தமிழ் மட்டுமே. ஆனால் தமிழ் இலக்கியத்தின் பொதுப்பண்பு இடைக்காலத்தில் மாறிவிட்டது.
6. பக்தி இயக்கக் கோட்பாடுகளின் தாக்கத்தின் விளைவாய் அது சமயங்களுக்கும் மைய இலக்கியங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கியது.
7. சாதி முறையும் சமூக ஏற்றத்தாழ்வுகளும் விமர்சனங்களுக்கு உள்ளாயின.

## VIII. உயர் சிந்தனை வினா :

**1. இஸ்லாத்தின் கடும் எதிர்ப்பையும் மீறி வேத இந்து மதத்தை பக்தி இயக்கம் பாதுகாத்தது என்பதை ஆராய்க.**

விடை:
1. பதினான்காம் பதினைந்தாம் நூற்றாண்டுகளில் வட இந்தியாவில் இந்து சமயத் தலைவர்கள் இஸ்லாம் குறித்து இரு வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டு இருந்தனர்.
2. ஒரு குழுவினர் இஸ்லாமில் எது சிறந்ததோ அதை ஏற்றுக்கொண்டனர்.
3. ஏனையோர் இஸ்லாம் மதத்திற்கு சமயம் மாறிச் செல்வதைத் தடுக்கும் பொருட்டு சில வழிமுறைகளைக் கையாண்டனர்.
4. வட இந்தியாவில் பக்திச் சிந்தனையை மக்கள் இயக்கமாக மாற்றியவர் இராமாநந்தர் ஆவார்.
5. வல்லபாச்சாரியார், சூர்தாஸ், மீராபாய், சைதன்ய தேவா, துளசிதாசர், துக்காராம் போன்றோர் பக்தி இயக்கச் சான்றோர்களின் முக்கியமானவர்கள் ஆவார்.
6. இந்து சமயத்திற்குப் புத்துயிர் ஊட்டப்பட்டது. அதனால் அது இஸ்லாமின் தாக்குதல்களில் இருந்து காக்கப்பட்டது.
7. பக்தி இயக்கம் இந்திய மொழிகள் வளர்வதற்கான இடத்தை ஏற்படுத்திக் கொடுத்தது.
8. பிராந்திய மொழிகளில் இலக்கியச் செயல்பாடுகளுக்கு அது உந்து சக்தியாய் அமைந்தது.
9. சரிவைச் சந்தித்துக் கொண்டிருந்த சமஸ்கிருத மொழி இந்து அரசுகளின் அரசர்கள் நல்கிய ஆதரவால் தக்கவைக்கப்பட்டது.


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores

அலகு 2

# தமிழ்நாட்டில் கலையும் கட்டடக் கலையும்

## மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**1. தென்னிந்தியாவில் உள்ள மிகப்பழமையான கட்டுமானக் கோவில் எது?**
அ) கடற்கரைக் கோவில் ஆ) மண்டகப்பட்டு
இ) கைலாசநாதர் கோவில் ஈ) வைகுந்தபெருமாள் கோவில்
**[விடை: அ) கடற்கரைக் கோவில்]**

**2. மாமல்லபுரத்திலுள்ள நினைவுச் சின்னங்களும் கோவில்களும் யுனெஸ்கோவால் எப்போது அங்கீகரிக்கப்பட்டது?**
அ) 1964 ஆ) 1994 இ) 1974 ஈ) 1984 **[விடை: ஈ) 1984]**

**3. முற்காலச் சோழர் கட்டடக்கலையின் சிறப்பம்சம் யாது?**
அ) புடைப்புச் சிற்பங்கள் ஆ) விமானங்கள்
இ) பிரகாரங்கள் ஈ) கோபுரங்கள் **[விடை: ஆ) விமானங்கள்]**

**4. அழகிய நம்பி கோவில் எங்கமைந்துள்ளது?**
அ) திருக்குறுங்குடி ஆ) மதுரை
இ) திருநெல்வேலி ஈ) திருவில்லிபுத்தூர் **[விடை: அ) திருக்குறுங்குடி]**

**5. வைகுண்ட பெருமாள் கோயிலைக் கட்டியவர் யார்?**
அ) மகேந்திரவர்மன் ஆ) நரசிம்மவர்மன்
இ) ராஜசிம்மன் ஈ) இரண்டாம் ராஜராஜன்
**[விடை: ★) இரண்டாம் நந்திவர்மன்]**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. பல்லவ அரசர் மகேந்திரவர்மனால் முதன்முதலாய் கட்டப்பட்ட குடைவரைக் கோவில் ________ என்ற இடத்தில் உள்ளது. **[விடை: மண்டகப்பட்டு]**
2. முற்கால சோழர் கட்டடக்கலை ________ பாணியைப் பின்பற்றியது. **[விடை: செம்பியன் மகாதேவி]**
3. மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் உள்ள மிகவும் புகழ்பெற்ற மண்டபம் ________ ஆகும். **[விடை: புதுமண்டபம்]**
4. பிற்கால சோழர் காலம் பொலிவுமிக்க ________ பெயர்பெற்றது. **[விடை: கோபுரங்களுக்கு]**
5. விஜயநகர கால கட்டடக்கலையின் தனித்துவ அடையாளம் ________ ஆகும். **[விடை: மண்டபங்கள்]**

**III. பொருத்துக.** **விடை:**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஏழு கோவில்கள் | மதுரை | கடற்கரைக்கோவில் |
| 2. | இரதிமண்டபம் | தாராசுரம் | திருக்குறுங்குடி |
| 3. | ஐராவதீஸ்வரர்கோவில் | திருக்குறுங்குடி | தாராசுரம் |
| 4. | ஆதிநாதர் கோவில் | கடற்கரைக்கோவில் | ஆழ்வார் திருநகரி |
| 5. | புதுமண்டபம் | ஆழ்வார் திருநகரி | மதுரை |


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores


IV.

1. **தவறான இணையைக் காண்க.**
   1. கிருஷ்ணாபுரம் கோவில் - திருநெல்வேலி
   2. கூடலழகர் கோவில் - ஆழ்வார் திருநகரி
   3. சேதுபதிகள் - மதுரை நாயக்க அரசின் சிற்றரசர்கள்
   4. ஜலகண்டேஸ்வரர் கோவில் - வேலூர்

**[விடை: 2) கூடலழகர் கோவில் - ஆழ்வார் திருநகரி]**

2. **கூற்று : இராமேஸ்வரம் கோவிலின் சிறப்புமிக்க பிரகாரங்கள் நம் கவனத்தை ஈர்ப்பதாய் அமைந்துள்ளன.**
   **காரணம் : உலகிலேயே மிக நீளமான கோவில் பிரகாரங்களை இக்கோவில் கொண்டுள்ளது.**
   அ) காரணம், கூற்றை விளக்கவில்லை ஆ) காரணம், கூற்றை விளக்குகின்றது
   இ) கூற்று சரி, காரணம் தவறு ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு

**[விடை: ஆ) காரணம், கூற்றை விளக்குகின்றது]**

3. **பொருந்தாததைக் கண்டுபிடி.**
   திருவில்லிபுத்தூர், அழகர்கோவில், ஸ்ரீரங்கம், காஞ்சிபுரம், திருவண்ணாமலை **[விடை: காஞ்சிபுரம்]**

4. **பின்வரும் காலத்திற்குப் பெயரிடுக.**
   அ) கி.பி. 600 - 850 - **பல்லவர் காலம்**
   ஆ) கி.பி. 850 - 1100 - **முற்கால சோழர்கள் காலம்**
   இ) கி.பி. 1100 - 1350 - **பிற்கால சோழர்கள் காலம்**
   ஈ) கி.பி. 1350 - 1600 - **விஜயநகர / நாயக்கர் காலம்**

5. **சரியான வாக்கியங்களைக் கண்டுபிடி.**
   1. மிகப்பெரும் கருங்கல் பாறையின் மீது புடைப்புச் சிற்பமாக அர்ச்சுனன் தவமிருக்கும் காட்சி செதுக்கப்பட்டுள்ளது.
   2. பல்லவர்கால கட்டடக்கலைப் பாணியில் மதுரை மீனாட்சி அம்மன் கோவில் அமைந்துள்ளது.
   3. பிள்ளையார்பட்டியிலுள்ள குகைக் கோவில் பிற்கால பாண்டியரின் பங்களிப்பாகும்.
   4. மதுரை நாயக்க அரசின் சிற்றரசர்களான சேதுபதிகள் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு சிறந்த பங்களிப்பைச் செய்துள்ளனர்.

**[விடை: 1) மிகப்பெரும் கருங்கல் பாறையின் மீது புடைப்புச் சிற்பமாக அர்ச்சுனன் தவமிக்கும் காட்சி செதுக்கப்பட்டுள்ளது, 3) பிள்ளையார்பட்டியிலுள்ள குகைக் கோவில் பிற்கால பாண்டியரின் பங்களிப்பாகும்]**

## V. சரியா? தவறா?

1. இராஜசிம்மன் காஞ்சி கைலாசநாதர் கோயிலைக் கட்டினார். **[விடை: சரி]**
2. முற்கால பாண்டியர், பிற்காலச் சோழரின் சமகாலத்தவர் ஆவர். **[விடை: தவறு]**
3. பாண்டியக் கட்டடக்கலையின் சிறப்பம்சமாய் திகழ்வது குடைவரை மற்றும் கட்டுமானக் கோவில்கள் ஆகும். **[விடை: சரி]**
4. பிரகதீஸ்வரர் கோவில் இராஜேந்திர சோழனால் கட்டப்பட்டது. **[விடை: சரி]**
5. தாதாபுரம் கோவிலில் விஜயநகர மற்றும் நாயக்கர் கால ஓவியங்களைக் காணமுடியும். **[விடை: தவறு]**

## VI. குறுகிய விடையளி.

1. **பஞ்சபாண்டவ இரதம் பற்றி குறிப்பு வரைக.**

விடை:1. தமிழ் திராவிட கோவில் கட்டடக் கலை மரபிற்கு ஒற்றைக் கல்லில் செதுக்கப்பட்டுள்ள பஞ்ச பாண்டவ இரதங்கள் சிறந்த எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன. அவை திரௌபதி இரதம், தர்மராஜா இரதம், பீமரதம், அர்ச்சுன இரதம், நகுல, சகாதேவ இரதம் ஆகியவை.
2. இரதங்களில் குறிப்பாக அர்ச்சுன, பீம, தர்மராஜா இரதங்களின் வெளிப்பக்கச் சுவர்கள் மாடக் குழிகளாலும் பூவணி வேலைப்பாடுகளாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளன.
3. பிரமாண்டமான கலைப்படைப்பாக விளங்கும் அர்ச்சுனன் தவமிருக்கும் காட்சி புடைப்புச் சிற்பம் ஏறத்தாழ 100அடி நீளமும் 45 அடி உயரமும் கொண்ட கருங்கல் பாறையாகும்.


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores


**2. சித்தன்னவாசல் ஓவியங்கள் பற்றிக் கூறுக.**

விடை:1. புதுக்கோட்டையிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது சித்தன்னவாசல். சித்தன்னவாசல் சமணத் துறவிகள் வாழ்ந்த குகையாகும்.

2. அவர்கள் குகைச் சுவர்களில் சாந்துபூசி, ஈரம் காய்வதற்கு முன்னரே ஓவியங்களைத் தீட்டியுள்ளனர்.
3. அங்குள்ள தாமரைத் தடாக ஓவியம் அதன் மிகச்சிறந்த வர்ணங்களின் பயன்பாட்டிற்கும் காட்சிகள் சித்தரிக்கப்பட்டுள்ள நேர்த்திக்காகவும் புகழ் பெற்றதாகும்.
4. தாமரை மலர்கள், குளமெங்கும் நீரில் பரவிக்கிடக்கும் இலைகள், குளத்தில் காணப்படும் யானை, எருமை, அன்னப்பறவை மற்றும் பூக்களைப்பறிக்கும் ஒரு மனிதன் என விரியும் அவ்வோவியக் காட்சி சிறப்பாக அமைந்துள்ளது.
5. சித்தன்னவாசல் ஓவியங்கள் அஜந்தா ஓவியங்களுடன் சில ஒப்புமைகளைப் பெற்றுள்ளன.

**3. தஞ்சை பெரிய கோவிலின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுக.**

விடை:1. தஞ்சாவூர் பெரிய கோவில் அது கட்டப்பட்ட போது ஒரு பெரிய கோவில் வளாகமே இருந்தது.

2. அதன் விமானம் 216 அடிகள் உயரம் கொண்டதாகும்.
3. உலகத்தில் மனிதனால் கட்டப்பட்ட மிக உயரமான சிகரங்களில் அதுவும் ஒன்று.
4. மிகவும் உயரமாக அமைந்திருப்பதால் அதன் சிகரம் தட்சிண மேரு என்று அழைக்கப்படுகிறது.
5. இங்குள்ள 16 அடி நீளமும் 13 அடி உயரமும் கொண்ட மிகப்பெரிய நந்தியின் சிலை ஒரே பாறையில் செதுக்கப்பட்டதாகும்.

**4. இராமேஸ்வரம் கோவில் நம் கவனத்தை ஈர்க்கும் விதத்தைக் கூறுக.**

விடை:1. இராமேஸ்வரம் கோவிலின் சிறப்புமிக்க பிரகாரங்கள் நம் கவனத்தை ஈர்ப்பதாய் அமைந்துள்ளன.

2. உலகிலேயே மிகவும் நீளமான கோவில் பிரகாரங்கள் இவையே எனச் சொல்லப்படுகிறது.
3. இக்கோவில் மூன்று பிரகாரச் சுற்றுக்களைக் கொண்டுள்ளது.
4. கோவிலின் வெளிப் பிரகாரத்தைத் தாங்கி நிற்கும் 1200க்கும் மேற்பட்ட தூண்கள் தனிச்சிறப்பு கொண்டதாகும்.
5. மேலும் மூன்று பிரகாரங்களில் உட்புறம் அமைந்துள்ள பிரகாரமே மிகப் பழமையானதாகும்.

## VII. விரிவான விடையளி.

**1. பல்லவர் காலத்தில் கோவில் கட்டடக்கலை குடைவரைக் கோவில்கள் எனும் நிலையிலிருந்து கட்டுமானக் கோவில்கள் எனும் மாற்றத்திற்கு உள்ளானது விளக்குக.**

விடை:1. பல்லவர் காலத்தில் கோவில் கட்டடக்கலை குடைவரைக் கோவில்கள் எனும் நிலையிலிருந்து கட்டுமானக் கோவில்கள் எனும் மாற்றத்திற்கு உள்ளானது.

2. குடைவரைக் கோவில்கள் நிர்மாணிக்கும் போது முதலில் ஒரு மலையின் பாறைப் பரப்பிலிருந்து தேவைப்படும் வடிவத்தில் ஒரு பகுதி வெட்டப்பட்டும் செதுக்கப்பட்டும் தனியொரு பாறையாக ஆக்கப்படும்.
3. பின்னர் அப்பாறையே குடையப்பட்டு கோவிலாக வடிவமைக்கப்படும்.
4. குடைவரைக் கட்டடக் கலைக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் பல்லவ அரசர் மகேந்திரவர்மன் ஆவார். **(எ.கா)** மண்டகப்பட்டு. இக்கோவிலின் முன்புறம் இரண்டு தூண்கள் அமைந்துள்ளன.
5. குடைவரைக் கோவில்கள் அனைத்திலும் பின்புறச் சுவற்றில் செதுக்கப்பட்ட ஒரு கருவறையையும் அதற்கு முன்பாக ஒரு முன்னோக்கிய மண்டபத்தையும் கொண்டுள்ளன.
6. மண்டபத்தின் இரு பக்கங்களிலும் துவாரபாலகர்கள் சிலைகள் இடம் பெற்றுள்ளன.
7. கி.பி. 700க்குப் பின்னர் குடைவரைக் கோவில்கள் மறைந்து பெரிய வடிவிலான கட்டுமானக் கோவில்கள் கட்டப்படுவதற்கு வழிவிட்டது.
8. மகாபலிபுரத்தில் அமைந்துள்ள கடற்கரைக் கோவில்கள் பல்லவ அரசர் இரண்டாம் நரசிம்மவர்மனால் கட்டப்பட்டவை ஆகும்.
9. இவை தென்னிந்தியாவின் மிகப் பழமையான கட்டுமானக் கோவில்களாகும்.
10. ஒரே பாறையில் கோவிலை அமைக்கும் பழைய முறைப்படி இல்லாமல் கட்டுமானக் கோவில்கள் பாறைப் பாளங்களைக் கொண்டு கட்டப்பட்டன.
11. காஞ்சி கைலாசநாதர் கோவில் (ராஜசிம்மன்), வைகுண்டப் பெருமாள் கோவில் (இரண்டாம் நந்திவர்மன்) ஆகியவை எடுத்துக்காட்டுகளாகும்.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

**2. விஜயநகர, நாயக்கர் கால கட்டடக்கலையானது பல்லவர் மற்றும் பிற்கால சோழர் கட்டடக்கலையிலிருந்து எவ்விதம் வேறுபடுகிறது என விவாதிக்கவும்.**

விடை:1. பதினைந்தாம் நூற்றாண்டு முதல் பதினேழாம் நூற்றாண்டு வரையிலான விஜயநகர, நாயக்க கட்டடக் கலையின் முக்கியக் கூறுகளாக திகழ்பவை, அழகூட்டப்பட்ட மண்டபங்கள், அலங்கரிக்கப்பட்ட தூண்கள், இயற்கை வடிவ அளவிலான சிலைகள், கோபுரங்கள், பிரகாரங்கள், இசைத்தூண்கள், மலர் அலங்கார வேலைபாடுகள், கல்லால் ஆன சாளரங்கள் ஆகியனவாகும்.

2. மேலும் கோவில்களோடு சேர்ந்து தெப்பக்குளங்கள் அமைக்கப்பட்டன.
3. கோவில்களுக்கான நுழைவாயில்கள் நான்கு புறங்களிலும் மிகப்பெரும் கோபுரங்களுடன் கட்டப்பட்டன.

**பல்லவர் கால சிற்பங்கள் :**

1. பாறை குடைவரைக் கோவில்களில் குகைகளின் சுவர்கள் கடவுளர்களின் புடைப்புச் சிற்பங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.
2. கட்டுமானக் கோவில்களை பொருத்தமட்டிலும் கருவறையின் சுவர்களில் அலங்கார வேலைப்பாடுகள் காணப்படவில்லை.
3. மாறாக கருவறையின் மேலுள்ள கட்டுமானங்களிலும் தூண்களிலும் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.

**பிற்காலச் சோழர்கள் :**

1. பிற்காலச் சோழர்கள் கட்டிய கோவில்கள் பெரிய வளாகமாக இருந்துள்ளது. அதன் விமானம் (தஞ்சாவூர் பெரிய கோவில்) 216 அடிகள் உயரம் கொண்டவை.
2. உலகத்தில் மனிதனால் கட்டப்பட்ட மிக உயரமான சிகரங்களில் இதுவும் ஒன்று.
3. தஞ்சை பெரிய கோவிலின் கருவறையைப் போலவே இரண்டு அடுக்குகளை கொண்டுள்ளது கங்கை கொண்ட சோழபுரம்.
4. மாடக்குழிகளில் கடவுளர்களின் வடிவங்கள் இடம்பெற்றுள்ளன.
5. கருவறையிலும் தூண்களிலும் புராண, இதிகாசக் கதாபாத்திரங்கள் சிற்றுருவங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.

## VIII. உயர் சிந்தனை வினா.

**1. திராவிடக் கட்டடக்கலை உள்நாட்டில் தோன்றியதை விளக்குக.**

விடை:1. திராவிடக் கட்டடக்கலை நம்மண்ணில் பிறந்ததாகும். காலப்போக்கில் பரிணாமச் செயல்பாட்டின் வழியாய் அக்கலை மேம்பாடு அடைந்தது.

2. தமிழ் திராவிடக் கட்டடக் கலையின் மரபிற்கு மகாபலிபுரத்திலுள்ள ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த காலத்தில் முந்தைய குடைவரைக் கோவில்களே எடுத்துக்காட்டுகளாகும்.
3. கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முந்தைய நினைவுச் சின்னங்கள் தென்னிந்தியாவிலில்லை. அதற்கு முந்தைய கோவில்கள் மரத்தால் கட்டப்பட்டிருக்க வேண்டுமெனவும் அதன் காரணமாக இயற்கை சக்திகளால் அழிவுக்கு உள்ளாகி இருக்கலாம் எனவும் அறிஞர்கள் கூறுகின்றனர்.
4. தமிழ்நாட்டில் கோவில் கலையின் வளர்ச்சிக்கு பல்லவ, சோழ, விஜயநகர, நாயக்க அரசர்கள் வழங்கிய பங்களிப்புகள் மிகவும் அதிகம்.
5. இது முதன்மையாக இந்து கோவில்களைக் கொண்டுள்ளது. அதற்கு முக்கிய காரணம் உயர்ந்த கோபுரம் மற்றும் பெரிய கோயில்கள் போன்றவை.
6. கோவில் கட்டடத்தின் மூன்று பாணிகளில் ஒன்றாக புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
7. திராவிடக் கட்டிடக் கலைக்கு சேரர்கள், சோழர்கள், பாண்டியர்கள், பல்லவர்கள், கடம்பர்கள், சாளுக்கியர்கள் மற்றும் விஜயநகர மன்னர்கள் பங்களித்தனர்.

**2. கோயில்கலை வளர்ச்சியானது நாயக்கர் காலத்தில் சிறந்தோங்கியது என்பதை தெளிவுபடுத்துக.**

விடை: **கோவில்களின் வளர்ச்சியானது நாயக்கர் காலத்தில் சிறந்து விளங்கியது :**

1. சிற்பங்களோடு கூடிய மாடக்குழிகளை அமைக்கும் பழக்கம் நாயக்கர் காலத்திலும் தொடர்ந்தது.
2. பெரிய வடிவங்களிலான புடைப்புச் சிற்பங்களை அமைக்கும் முறை அதிகரித்தது என்பதை திருநெல்வேலி மாவட்டம் திருக்குறுங்குடி அழகியநம்பி கோவில், திருவரங்கம் ரங்கநாதர் கோவில் வளாகத்தில் அமைந்துள்ள கோபாலகிருஷ்ண கோவில் ஆகியவற்றில் காண முடியும்.

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores


3. ஆழ்வார் திருநகரியில் ஆதிநாதர் கோவிலிலுள்ள தெற்குவிழா மண்டபம், திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலின் முகப்பில் மேற்கூரையுடன் அமைந்துள்ள புகுமுக மண்டபம் ஆகியவை குறிப்பிடத்தகுந்த எடுத்துக்காட்டுகளாகும்.

## கூடுதல் வினாக்கள்

**I சரியான விடையைத் தேர்வு செய்க.**

**1. பல்லவ மன்னர் _________ காஞ்சி கைலாசநாதர் கோவிலைக் கட்டுவித்தார்.**
அ) இரண்டாம் நந்திவர்மன் ஆ) இரண்டாம் நரசிம்மவர்மன்
இ) இரண்டாம் ராஜராஜன் ஈ) மகேந்திரவர்மன்
**[விடை: ஆ) இரண்டாம் நரசிம்மவர்மன்]**

**2. குடைவரைக் கோவில் கருவறையின் இருபுறத்திலும் _________ சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன.**
அ) சூரியன் ஆ) பிரம்மா இ) சரஸ்வதி ஈ) துவாரபாலகர்
**[விடை: ஈ) துவாரபாலகர்]**

**3. புதுக்கோட்டையிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது _________.**
அ) சங்கரன் கோவில் ஆ) சித்தன்ன வாசல்
இ) திருமலைபுரம் ஈ) தாதாபுரம் **[விடை: ஆ) சித்தன்ன வாசல்]**

**4. தஞ்சாவூர் பெரிய கோவிலின் விமானம் (கர்ப்ப கிரகத்தில் மேலுள்ள கட்டுமானம்) _________ அடிகள் உயரம் கொண்டதாகும்.**
அ) 216 ஆ) 217 இ) 218 ஈ) 219 **[விடை: அ) 216]**

**5. தாராசுரத்தில் உள்ள ஐராவதீஸ்வரர் கோயில் _________ அரசனால் கட்டப்பட்டுள்ளது.**
அ) இரண்டாம் ராஜராஜன் ஆ) ராஜேந்திர சோழன்
இ) விஜயாலய சோழன் ஈ) ராஜராஜன் **[விடை: அ) இரண்டாம் ராஜராஜன்]**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. குடைவரைக் கோவில்கள் அமைக்கும் முறை _________ க்குப் பின்னர் மறைந்து பெரிய வடிவிலான கட்டுமானக் கோவில்கள் கட்டப்படுவதற்கு வழிவிட்டது. **[விடை: கி.பி. 700]**
2. இரதங்களின் வெளிப்பக்க சுவர்கள் மாடக்குழிகளாலும் _________ வேலைப்பாடுகளாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளன. **[விடை: பூவணி]**
3. முற்காலப் பாண்டியர்கள் பல்லவர்களின் _________ காலத்தவராவர். **[விடை: சம]**
4. கருவறையில் உபயோகித்த நீர் வெளியே செல்ல _________ அமைக்கப்பட்டுள்ளது. **[விடை: கால்வாயும்]**
5. முற்காலச் சோழர்களின் கோவில் கட்டடக் கலைக்கு தமிழ்நாட்டில் திண்டிவனத்திற்கு அருகேயுள்ள _________ உள்ள கோவிலைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். **[விடை: தாதாபுரம்]**

**III. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | பல்லவர் காலம் | அ) | கி.பி. 1600 க்கு பின்னர் |
| 2. | முற்காலச் சோழர்கள் | ஆ) | கி.பி. 1100 - 1350 |
| 3. | பிற்காலச் சோழர்கள் | இ) | கி.பி. 1350 - 1600 |
| 4. | விஜயநகர / நாயக்கர் காலம் | ஈ) | கி.பி. 600 - 850 |
| 5. | நவீன காலம் | உ) | கி.பி. 850 - 1100 |

**[விடை: 1-ஈ, 2-உ, 3-ஆ, 4-இ, 5-அ]**

**IV.**

**1. தவறான இணையைக் காண்க.**
1. ஆழ்வார் திருநகரி - ஆதிநாதர்
2. மதுரை - மீனாட்சி சுந்தரேஸ்வரர்
3. திருக்குறுங்குடி - கற்பக விநாயகர்
4. திருவரங்கம் - ரங்கநாதர் கோவில்

**[விடை: 3) திருக்குறுங்குடி - கற்பக விநாயகர்]**


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


**2. கூற்று : கும்பகோணத்திற்கு அருகேயுள்ள தாராசுரத்தில் பிற்காலச் சோழர்களின் கோவில் உள்ளது.**

**காரணம் : இக்கோவில் பாண்டியர்களின் கட்டடக் கலைக்கு சிறந்த அடையாளமாகும்.**

அ) காரணம், கூற்றை விளக்கவில்லை. ஆ) காரணம், கூற்றை விளக்குகின்றது
இ) கூற்று சரி, காரணம் தவறு. ஈ) கூற்று காரணம் இரண்டும் தவறு.

**[விடை: இ) கூற்று சரி, காரணம் தவறு]**

**3. பொருந்தாததைக் கண்டுபிடி.**

வேலூர், திண்டுக்கல், திருநெல்வேலி, தஞ்சாவூர், மதுரை **[விடை: மதுரை]**

**4. சரியான வாக்கியங்களைக் கண்டுபிடி.**

1. குடைவரைக் கட்டடக் கலைக்கு முன்னோடியாக திகழ்ந்தவர் மகேந்திரவர்மன் ஆவார்.
2. தஞ்சையில் உள்ள வைகுண்டப் பெருமாள் கோவில் இரண்டாம் நந்திவர்மனால் கட்டப்பட்டது.
3. 1964 இல் மாமல்லபுரத்திலுள்ள கடற்கரை கோவில் வளாகம் யுனெஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்டது.
4. திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில் பாண்டியர் கட்டடக்கலைப் பணியைப் பறைசாற்றும் எடுத்துக்காட்டு ஆகும்.

**[விடை: 1) குடைவரைக் கட்டடக் கலைக்கு முன்னோடியாக திகழ்ந்தவர் மகேந்திரவர்மன் ஆவார், 2) தஞ்சையில் உள்ள வைகுண்டப் பெருமாள் கோவில் இரண்டாம் நந்திவர்மனால் கட்டப்பட்டது.]**

## IV. சரியா? தவறா?

1. கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முந்தைய நினைவுச் சின்னங்கள் தென்னிந்தியாவில் இருந்தது. **[விடை: தவறு]**
2. கட்டிடக் கலையின் பரிணாம வளர்ச்சி ஐந்து கட்டங்களாக நடைபெற்றுள்ளது. **[விடை: சரி]**
3. முற்காலப் பாண்டியர்கள் பல்லவர்களின் சம காலத்தவராவர். **[விடை: சரி]**
4. சிவலிங்கமானது கருவறையின் மையத்தில், சுற்றிலும் போதுமான இடம் விடப்பட்டு நிறுவப்படவில்லை. **[விடை: தவறு]**
5. கருவறையின் இருபுறத்திலும் துவாரபாலகர் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. **[விடை: சரி]**

## V. குறுகிய விடையளி.

**1. பல்லவர் காலத்தில் கோவில் கட்டடக்கலை எவ்வாறு இருந்தது?**

விடை:1. பல்லவர் காலத்தில் கோவில் கட்டடக்கலை குடைவரைக் கோவில்கள் எனும் நிலையிலிருந்து கட்டுமானக் கோவில்கள் எனும் மாற்றத்திற்கு உள்ளானது.

2. குடைவரைக் கோவில்கள் நிர்மாணிக்கும் போது முதலில் ஒரு மலையின் பாறைப்பரப்பிலிருந்து தேவைப்படும் வடிவத்தில் ஒரு பகுதி வெட்டப்பட்டும் செதுக்கப்பட்டும் தனியொரு பாறையாக ஆக்கப்படும்.

3. பின்னர் அப்பாறையே செதுக்கப்பட்டும் குடையப்பட்டும் கோவிலாக வடிவமைக்கப்படும்.

**2. ஏழு கோவில்கள் - குறிப்பு வரைக.**

விடை: ஏழு கோவில்கள் என அழைக்கப்படும் மகாபலிபுரத்தில் அமைந்துள்ள கடற்கரைக் கோவில்கள் பல்லவ அரசர் இரண்டாம் நரசிம்மவர்மனால் எழுப்பப்பட்டவை ஆகும். அவை தென்னிந்தியாவின் மிகப்பழமையான கட்டுமானக் கோவில்களாகும்.

**3. மதுரை அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் அகழ்ந்தெடுக்கப்பட்ட சிலைகள் தற்போது எங்குள்ளன?**

விடை: மதுரை அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் அகழ்ந்தெடுக்கப்பட்ட முற்காலப் பாண்டியர் காலத்தை சேர்ந்த சிலைகள் தற்போது மதுரையிலுள்ள திருமலை நாயக்கர் அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

**4. கழுகுமலை வெட்டுவான் கோவில் பற்றி சிறுகுறிப்பு வரைக.**

விடை:1. ஒற்றைக்கல்லில் செதுக்கப்பட்ட கோவிலுக்கு, மிகச் சிறந்த எடுத்துக்காட்டு கழுகுமலையில் உள்ள முற்றுப்பெறாத வெட்டுவான் கோவிலாகும்.

2. கழுகுமலையில் அமைந்துள்ள ஒற்றைக்கல் கோவிலான வெட்டுவான் கோவில் ஒரு பெரும் பாறையின் நான்கு புறங்களிலிருந்தும் செதுக்கி அமைக்கப்பட்டதாகும்.


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores


3. கோவிலின் உச்சியில் உமா மகேஸ்வரர், தட்சிணாமூர்த்தி, விஷ்ணு, பிரம்மா ஆகியோரின் சிற்பங்கள் காணப்படுகின்றன.

**5. பிற்காலச் சோழர்கள் காலத்தில் கட்டப்பட்ட உன்னதமான கோவில்கள் பற்றிக் கூறவும்.**

விடை:1. தஞ்சாவூரிலும், கங்கை கொண்ட சோழபுரத்திலும் அமைந்துள்ள இரண்டு உன்னதமான கோவில்கள் சோழர்களின் கட்டடக்கலை முதிர்ச்சியைப் பிரதிபலிக்கின்றன.

2. ஏறத்தாழ கி.பி. 1009 இல் கட்டி முடிக்கப்பட்ட தஞ்சாவூரிலுள்ள சிவன் கோவில் ராஜராஜன் காலத்து செல்வ பெருக்கச் சாதனைகளுக்குப் பொருத்தமான நினைவுச் சின்னமாகும்.

## VII. விரிவான விடையளி.

**1. விஜயநகர அரசர்களின் ஆட்சிக்காலத்தில் ஒரு புதிய வடிவிலான கட்டடம் கட்டும் முறை எவ்வாறு உருவானது?**

விடை:1. விஜயநகர அரசர்களின் ஆட்சிக்காலத்தில் ஒரு புதிய வடிவிலான கட்டடம் கட்டும் முறை உருவானது.

2. கோவில்களில் மண்டபங்கள் கட்டப்பட்டன.
3. ஒவ்வொரு ஆண்டும் கடவுளர்களின் திருவுருவச்சிலைகள் மண்டபங்களில் காட்சிப்படுத்தப்பட்டன.
4. கோவிலுக்கு வெளிப்புறத்தில் கட்டப்பட்ட தூண்களுடன் கூடிய இம்மண்டபங்கள் பொது நிகழ்ச்சிக்காக உருவாக்கப்பட்டவையாகும்.
5. கோவிலுக்கு கிழக்கே பொதுமக்கள் கூடுவதற்காகக் கட்டப்பட்ட இம்மண்டபங்கள் பொற்குடத்திற்கு பொட்டு வைத்தாற்போல் கோவிலுக்கு மேலும் அழகு சேர்த்தன.
6. மண்டபத்திலுள்ள ஒற்றைக்கால் தூண்கள் கவனத்தை ஈர்ப்பதாக அமைந்துள்ளன.
7. இத்தூண்களில் குதிரைகள், சிங்கங்கள் மற்றும் கடவுளர்களின் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.
8. காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோவில், வேலூரிலுள்ள ஜலகண்டேஸ்வரர் கோவில் ஆகியவற்றிலுள்ள கல்யாண மண்டபங்கள் குறிப்பிடத்தகுந்த எடுத்துக்காட்டுகள் ஆகும்.
9. இம்மண்டபங்களுள் மிகவும் புகழ் பெற்றது மதுரை கோவிலில் அமைந்து உள்ள புதுமண்டபமாகும்.

☆ ☆ ☆

# அலகுத் தேர்வு

நேரம் : 1 மணி மதிப்பெண் : 25

## I சரியான விடையைத் தேர்வு செய்க. (3 × 1 = 3)

**1. தென்னிந்தியாவில் உள்ள மிகப்பழமையான கட்டுமானக் கோவில் எது?**

அ) கடற்கரைக் கோவில் ஆ) மண்டகப்பட்டு
இ) கைலாசநாதர் கோவில் ஈ) வைகுந்த பெருமாள் கோவில்

**2. முற்காலச் சோழர் கட்டடக்கலையின் சிறப்பம்சம் யாது?**

அ) புடைப்புச் சிற்பங்கள் ஆ) விமானங்கள்
இ) பிரகாரங்கள் ஈ) கோபுரங்கள்

**3. அழகிய நம்பி கோவில் எங்கமைந்துள்ளது?**

அ) திருக்குறுங்குடி ஆ) மதுரை
இ) திருநெல்வேலி ஈ) திருவில்லிபுத்தூர்

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக. (3 × 1 = 3)

1. முற்கால சோழர் கட்டடக்கலை __________ பாணியைப் பின்பற்றியது.
2. மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் உள்ள மிகவும் புகழ்பெற்ற மண்டபம் __________ ஆகும்.
3. பிற்கால சோழர் காலம் பொலிவு மிக்க __________ பெயர் பெற்றது.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores


III. **பொருத்துக.** (4 × 1 = 4)

| | | | |
|---|---|---|---|
| 1. | ஏழு கோவில்கள் | அ) | திருக்குறுங்குடி |
| 2. | இரதி மண்டபம் | ஆ) | தாராசுரம் |
| 3. | ஐராவதீஸ்வரர் கோவில் | இ) | ஆழ்வார் திருநகரி |
| 4. | ஆதிநாதர் கோவில் | ஈ) | கடற்கரை கோவில் |

IV. **சரியான வாக்கியங்களைக் கண்டுபிடி.** (1 × 1 = 1)

1. மிகப்பெரும் கருங்கல் பாறையின் மீது புடைப்புச் சிற்பமாக அர்ச்சுனன் தவமிருக்கும் காட்சி செதுக்கப்பட்டுள்ளது.
2. பல்லவர் கால கட்டடக்கலைப் பாணியில் மதுரை மீனாட்சி அம்மன் கோவில் அமைந்துள்ளது.

V. **சரியா? தவறா?** (3 × 1 = 3)

1. இராஜசிம்மன் காஞ்சி கைலாசநாதர் கோயிலைக் கட்டினார்?
2. முற்கால பாண்டியர் பிற்காலச் சோழரின் சமகாலத்தவர் ஆவார்.
3. கருவறையின் இருபுறத்திலும் துவாரபாலகர் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

VI. **குறுகிய விடையளி.** (3 × 2 = 6)

1. பஞ்ச பாண்டவ இரதம் பற்றி குறிப்பு வரைக.
2. சித்தன்ன வாசல் ஓவியங்கள் பற்றிக் கூறுக.
3. தஞ்சை பெரிய கோவிலின் சிறப்பம்சங்களை குறிப்பிடுக.

VII. **விரிவாக விடையளிக்கவும் :** (1 × 5 = 5)

1. பல்லவர் காலத்தில் கோவில் கட்டிடக்கலை குடைவரைக் கோவில்கள் எனும் நிலையிலிருந்து கட்டுமானக் கோவில்கள் எனும் மாற்றத்திற்கு உள்ளானது. விளக்குக.

## விடைகள்

I) 1. ஆ) மண்டகப்பட்டு 2. ஆ) விமானங்கள் 3. அ) திருக்குறுங்குடி

II) 1. செம்பியன் மகாதேவி 2. 1000 கால் மண்டபம் 3. கோபுரங்களுக்கு

III) 1. 1-ஈ, 2-அ, 3-ஆ, 4-இ

IV) 1. மிகப்பெரும் கருங்கல் பாறையின் மீது புடைப்புச் சிற்பமாக அர்ச்சுனன் தவமிருக்கும் காட்சி செதுக்கப்பட்டுள்ளது.

V) 1. சரி 2. தவறு 3. சரி

VI) 1. பார்க்க சுராவின் கையேடு புத்தக வினா VI - 1
2. பார்க்க சுராவின் கையேடு புத்தக வினா VI - 2
3. பார்க்க சுராவின் கையேடு புத்தக வினா VI - 3

VII) 1. பார்க்க சுராவின் கையேடு புத்தக வினா VII - 1

☆ ☆ ☆


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores

| 7ஆம் வகுப்பு | மூன்றாம் பருவம் – தொகுத்தறி மதிப்பீடு (SA) - 2022<br>சமூகஅறிவியல்<br>(வினாத்தாள் விடைகளுடன்) | தேர்வு எண் |
|---|---|---|
| நேரம் : 2.00 மணி | | மதிப்பெண்கள் : 60 |

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (5 × 1 = 5)

1. அத்வைதம் எனும் தத்துவத்தை போதித்தவர் யார் ?
   அ) இராமானுஜர் ஆ) இராமாநந்தர்
   இ) நம்மாழ்வார் ஈ) ஆதி சங்கரர்

2. கலாச்சார நிலவரை படங்கள் என்பன ......... அமைப்புகளைக் காட்டுகின்றன.
   அ) இயற்கையான
   ஆ) மனிதனால் உருவாக்கப்பட்ட
   இ) செயற்கையான
   ஈ) சுற்றுச்சூழல்

3. சுனாமி என்ற சொல் ..................... மொழியிலிருந்து பெறப்பட்டது.
   அ) ஜப்பான் ஆ) சீனா
   இ) அராபிக் ஈ) பாரசீகம்

4. சாவித்ரிபாய் புலே வால் பெண்களுக்கான முதல் பள்ளி ................ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
   அ) 1848 ஆ) 1858
   இ) 1838 ஈ) 1828

5. வருமான வரி என்பது ................
   அ) நேர்முக வரி
   ஆ) மறைமுக வரி
   இ) அ மற்றும் ஆ
   ஈ) இவற்றில் எதுவுமில்லை

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** (4 × 1 = 4)

6. பல்லவ அரசர் மகேந்திரவர்மனால் முதன்முதலாய் குடைவரைக் கோவில் ............... என்ற இடத்தில் உள்ளது.

7. காடாஸ்டரல் நிலவரைபடங்கள் ............. என அழைக்கப்படுகின்றன.

8. ஒழுங்குப்படுத்தப்பட்ட சந்தைகளில், பொருத்தமான .............. அதிகாரிகளால் சில மேற்பார்வை உள்ளது.

9. மறைமுக வரி என்பது .................. நெகிழ்ச்சி உடையது.

**III. சரியா? தவறா? - காண்.** (3 × 1 = 3)

10. இஸ்லாமிய பண்பாடு பரவ சூபியிஸம் காரணமாயிற்று.

11. குருநானக், சீக்கியர்களின் முதல் குருவாகக் கருதப்படுகிறார்.

12. பிரகதீஸ்வரர் கோவில் இராஜேந்திர சோழனால் கட்டப்பட்டது.

**IV. பொருந்தாததைக் கண்டுபிடித்து எழுது.** (3 × 1 = 3)

13. வடகிழக்கு, அளவை, வடமேற்கு மற்றும் கிழக்கு.

14. கார், டிரக், டெம்போ, ஏரோப்ளேன்.

15. **பின்வருவனவற்றில் எது மறைமுக வரி அல்ல ?**
    சேவை வரி, மதிப்பு கூட்டப்பட்ட வரி, சொத்து வரி, சுங்க வரி

**V. பொருத்துக.** (5 × 1 = 5)

| | | | |
|---|---|---|---|
| 16. | குருநானக் | – | புயலின் கண் |
| 17. | பெரிய அளவை நிலவரைபடம் | – | மறைமுக வரி |
| 18. | சூறாவளி | – | மாவட்டம் (அல்லது) நகரம் |
| 19. | வரிக்குதிரை கடப்பு | – | குரு கிரந்த சாகிப் |
| 20. | சுங்க வரி | – | பாதசாரிகள் |



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores



**VI. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி. (ஏதேனும் 7)** (7 × 2 = 14)

21. நாயன்மார்கள் மொத்தம் எத்தனை பேர்? அவர்களில் முக்கியமானோர் யாவர்?
22. தஞ்சை பெரிய கோயிலின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுக.
23. முதன்மை திசைகள் யாவை?
24. நிலவரைபட நூல் என்பது என்ன?
25. சாவித்ரிபாய் புலே பற்றி குறிப்பு வரைக.
26. நுகர்வோர் என்றால் என்ன?
27. ஏதேனும் 4 சாலை பாதுகாப்பிற்கான விதிகளை கூறுக.
28. வெள்ளத்தினால் ஏற்படும் மூன்று விளைவுகள் பற்றி எழுதுக.
29. வரியின் வகைகள் யாவை? மற்றும் அதனைப் பற்றி விளக்குக.
30. நன்கொடை அல்லது அன்பளிப்பு வரி மற்றும் சேவை வரி பற்றிச் சிறுகுறிப்பு வரைக.

**VII. வேறுபடுத்துக.** (3 × 2 = 6)

31. நில வரைபட நூல் – சுவர் வரைபடம்
32. வெள்ளம் – சூறாவளி
33. நேர்முக வரி – மறைமுக வரி

**VIII. கீழ்க்காணும் வினாக்களுள் 4 வினாக்களுக்கு விரிவான விடையளி** (4 × 5 = 20)

34. சூபியிஸம் என்றால் என்ன? அது இந்தியாவில் எவ்விதம் தடம் பதித்தது?
35. பல்லவர் காலத்தில் கோவில் கட்டடக்கலை குடைவரைக் கோவில்கள் எனும் நிலையிலிருந்து கட்டுமானக் கோவில்கள் எனும் மாற்றத்திற்கு உள்ளானது விளக்குக.
36. அளவையின் அடிப்படையில் நில வரைபடத்தின் வகைகளை விரிவாக எழுது.
37. வெள்ளம் மற்றும் அதன் விளைவுகளையும் அதனை மட்டுப்படுத்துதல் பற்றியும் விளக்குக.
38. பெண் கல்வியின் முக்கியத்துவத்தை குறிப்பிட்டு ஒரு கட்டுரை எழுதுக.
39. சாலை பாதுகாப்பிற்கான முக்கிய விதிகளை விவரி.
40. சந்தைகளின் வகைகள் மற்றும் அதன் செயல்பாடுகளைப் பற்றி எழுதுக.
41. நேர்முக மற்றும் மறைமுக வரியை உதாரணத்துடன் விளக்குக.

☆ ☆ ☆

## விடைகள்

**I.**

1. ஈ) ஆதி சங்கரர்
2. ஆ) மனிதனால் உருவாக்கப்பட்ட
3. அ) ஜப்பான்
4. அ) 1848
5. அ) நேர்முக வரி

**II.**

6. மண்டகப்பட்டு
7. கிராமம் மற்றும் நகர்புறங்களின் வரைபடம்
8. அரசாங்க
9. அதிக

**III.**

10. தவறு
11. சரி
12. சரி

**IV.**

13. அளவை
14. ஏரோப்ளேன்
15. சொத்துவரி

**V.**

16. குருநானக் – குரு கிரந்த சாகிப்
17. பெரிய அளவை நிலவரைபடம் – மாவட்டம் (அல்லது) நகரம்
18. சூறாவளி – புயலின் கண்
19. வரிக்குதிரை கடப்பு – பாதசாரிகள்
20. சுங்க வரி – மறைமுக வரி

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com